392

392

# சுதேச வாசகம்.

## மூன்றாம் புத்தகம்

(திருத்திய பதிப்பு)

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
12 NOV 1948
MADRAS

ஆரம்பப் பாடசாலை புதிய பாட
நிர்மாணத் திட்டப்படி தயாரித்தது

பொங்கும் மங்களம் எங்கும் தங்குக

# சுதேச வாசகம்

## மூன்றும் புத்தகம்

(ஆரம்பப் பாடசாலைப் புதிய பாடத் திட்டப்படி தயாரித்தது)

வி. கோ. சூரியநாராயண சாஸ்திரியார், பி. ஏ.,
அவர்கள் குமாரர்
வி. சூ. சுவாமிநாதன்
தொகுத்தது

OFFICE OF THE REGISTRAR
22 NOV 194
MADRAS

பதிப்பாளர்:
வி. சூ. சுவாமிநாதன்
மதுரை :: திருநெல்வேலி

[விலை அணா 7

பதிப்புரிமை]

173794

*Revised Edition—November, 1948. 600 Copies.*

# முன்னுரை

1939-ம் வருஷம் வெளியிட்டுள்ள ஆரம்பப் பாடசாலைப் பாடத்திட்டப்படி இந்தச் சுதேச வாசகம் மூன்றாம் புத்தகத்தையும் வெளியிடலானோம். ஏற்கனவே வெளிவந்துள்ள இரண்டாம் புத்தகத்தைத் தொடர்ந்து உயர்ந்த வசன நடை, புது வார்த்தைகள், கடின பதங்கள் முதலியவை இதில் படிப்படியாகப் புகுத்தப்பட்டிருக்கின்றன. இவைகள் நம் நாட்டுப் பழக்க வழக்கங்களுக்கு ஏற்றவாறே அமைக்கப்பட்டுள்ளன. எந்தப் பாடத்திலும் அனுபவ சாத்தியமாய்ப் போதிக்கக் கூடியவைகளையும், அவைகளுக்கு அவசியமான சில புது வார்த்தைகளையும், சிரமமில்லாமல் புகட்டக்கூடிய விதத்திலேயே இப்புத்தகம் எழுதப்பட்டுள்ளது.

பின்வரும் பாடங்களைச் சிறிதும் சிரமமின்றிப் படித்தறியவும், அவைகளில் வரும் இலக்கண முறைகளை, அப்பாடங்களிலிருந்தே அனுபவ சாத்தியமாய் தெரிந்து கொள்ளவும், புத்தகத்தின் ஆரம்பத்திலேயே எழுத்து, வார்த்தை, வாக்கியம், பெயர், வினைச் சொற்கள் இவைகளின் இலக்கண அம்சங்கள் கூறப்பட்டிருக்கின்றன. இந்நோக்கங்கொண்டே ஒவ்வொரு பாடத்தின் இறுதியிலும் இலக்கண அம்சங்கள், பாடத்தின் விஷயங்கள் இவைகளைப் பற்றிய கேள்விகள் அடங்கிய அப்பியாசம் சேர்க்கப்பட்டிருக்கிறது. ஆசிரியர்கள் அவ்வப்பியாசத்தில் பிள்ளைகளுக்குப் பயிற்சி கொடுப்பதுடன், சமய சந்தர்ப்பத்திற்கு ஏற்றவாறு மேற்கொண்டும் இம்மாதிரிக் கேள்விகளில் பிள்ளைகளுக்குப் பயிற்சி அளிக்கவேண்டும்.

முக்கியமாக ஆசிரியர்கள் பிள்ளைகளின் பத உச்சரிப்பைச் சீர்திருத்தவும், வார்த்தைகளின் முடிவில் ஏற்படும் குறையுள்ள சத்தங்களை நிவர்த்திக்கவும் பாடுபட வேண்டும். இவ்வாறு பாடுபடின் அதற்குத் தகுந்த பலன் கிடைக்குமென்பது திண்ணம். இதனால் பிள்ளைகள் உச்சரிப்பதிலும், கேட்டு எழுதுவதிலும் தவறுகள் ஏற்படா. விவரமாய்ப் பொருள் கூறி, உதாரணங்களுடன் விளக்க வேண்டிய வார்த்தைகள் ஒவ்வொரு பாடத்தின் ஆரம்பத்திலும் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இப்பாடங்களைக் கற்பிக்குங்கால், அந்தப் பாடத்திற்கு ஏற்றவாறு பிள்ளைகளின் பகுத்தறிவை வெளிக்கொணர அவசியமான கேள்விகளையும் அவர்களது அனுபவங்களையும் கேட்க வேண்டும். மேற்கண்ட லக்ஷியங்களை நன்குணர்ந்து, இப்புத்தகத்திலுள்ள ஒவ்வொரு பாடத்தையும் கற்பிக்குமாறு ஆசிரியர்களை வேண்டுகிறோம்.

இவ்வாசக வரிசை வெளிவர உதவிய ஆசிரியர்க்கும் கல்வி அதிகாரிகளுக்கும் எம் மனமார்ந்த வந்தனம் உரித்தாகுக.

**பதிப்பாசிரியன்**

KABEER PRINTING WORKS, TRIPLICANE, MADRAS.

## கடவுள் துதி

("கல்லார்க்கும் கற்றவர்க்கும்" என்ற பாடலின் சந்தம்)

கல்விகற்கும் ஆசையுள்ளோர் கருதுகின்ற கருத்தே!
கலக்கமறச் சிறுவருக்குக் கருணைபொழி முகிலே!

செல்வமுடன் அடியவர்க்குச் சிறப்பருளும் சிறப்பே!
சிந்தையுற நினைப்பவர்க்குத் திறமுதவும் திறமே!

பல்விதத்தும் நன்மையுறப் பாலிக்குந்தற் பரமே!
பாடுகின்ற பாடல்களின் பதம்பொருளாம் பொருளே!

அல்வழியிற் போகவிடா தாண்டருளும் குருவே!
ஆண்டவ! எம் துதியினையும் அன்புடன் ஏற்றருளே!

—நா. கனகராஜ ஐயர்

## தேச வணக்கம்

(கும்மி மெட்டு)

ஓங்கும் இமாசலம் ஒளிமுடியாம்; எங்கும்
உலவு பலநதி மாலைகளாம்;
தாங்கும் இக்கோலம் தழைக்கும் இந்தியத்
தாயே! உனக்கு நமஸ்காரம். 1

கண்டங்களெங்கும் காணும்நற் காட்சிகள்
கலந்து தன்னுள்ளே காட்டுதலால்
அண்டமெங்கும் இல்லா அருமை இந்திய
அன்னை! உனக்கு நமஸ்காரம். 2

நீர்வளமும் காட்டின் நீர்வளமும் மலை
நேர்வளமும் நகர்சாரும் சிற்பச்
சீர்வளமும் மிகத்திகழும் இந்தியச்
செல்வி! உனக்கு நமஸ்காரம். 3

ஞாலமெங்கும் வெகு காலமாக நல்ல
நாகரிகக் குறியாக உயர்
சீலமும் ஞானமும் சிறக்கும் பாரத
தேவி! உனக்கு நமஸ்காரம். 4

வே. முத்துசாமி ஐயர்

# பொருளடக்கம்


| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| அப்பியாசம்-1 | | |
| எழுத்து | — | 5 |
| அப்பியாசம்-2 | | |
| தமிழ் எழுத்துக்களும் வடமொழி எழுத்துக்களும் | — | 6 |
| அப்பியாசம்-3 | | |
| வாக்கியம் | — | 8 |
| 1. கோவில்கள் | — | 9 |
| அப்பியாசம்-4 | | |
| முற்றுப்புள்ளி | — | 11 |
| 2. பாஷாபிமானம் | — | 12 |
| 3. செந்தமிழ் நாடு | — | 15 |
| 4. பனையும் ஆலும் | — | 16 |
| 5. போலீஸ்காரன் | — | 18 |
| 6. மழை | — | 21 |
| 7. அதிக ஆசை ஆகாது | — | 23 |
| 8. ஔவையார் | — | 26 |
| 9. சோம்பேறிப் பையன் | — | 29 |
| 10. பத்மினி | — | 30 |
| 11. முகம்மது நபி | — | 33 |
| 12. கயிறு திரித்தல் | — | 35 |
| 13. சிபிச் சக்கரவர்த்தி | — | 37 |
| 14. உப்பு | — | 38 |
| 15. பாரதியார் | — | 41 |

| விஷயம் | | பக்கம் |
|---|---|---|
| 16. ஏரி | — | 43 |
| 17. கோசு | — | 46 |
| 18. மகாத்மா காந்தி | — | 47 |
| 19. சுத்தம் சோறு போடும் | — | 50 |
| 20. ஒற்றுமை | — | 52 |
| 21. வெண்ணிலா | — | 55 |
| 22. இயேசு கிறிஸ்துநாதர் | — | 56 |
| 23. பருத்தி | — | 59 |
| 24. பருத்தி | — | 61 |
| 25. அதிவீரராம பாண்டியர் | — | 63 |
| 26. தேசிங்கு ராஜன் | — | 65 |
| 27. தேசிங்கு ராஜனின் வீர மரணம் | — | 68 |
| 28. உபகாரம் வீண்போகாது | — | 69 |
| அப்பியாசம்-5 | | |
| 29. கடிதம் எழுதும் முறை | — | 72 |
| அப்பியாசம்-6 | | |
| படப்பழக்கம் I, II | — | 75 |
| 30. தலையணைஉறை தைத்தல் | — | 77 |
| 31. கொன்றைவேந்தன் | — | 77 |
| 32. கூடாப் பத்து | — | 79 |
| அப்பியாசம்-7 | | |
| படப்பழக்கம் III | — | 80 |

# சுதேச வாசகம்

## மூன்றும் புத்தகம்

### அப்பியாசம்—1

### எழுத்து

**எழுத்து** என்பது ஓசை அல்லது சத்தத்தின் வரிவடிவம். ஒவ்வொரு எழுத்துக்கும் தனிப்பட்ட சத்தம் உண்டு.

**உதாரணம்:—** அ, க, சா, டி, தீ, பு, மூ, ஞே முதலியன. எழுத்து நான்கு வகைப்படும்.

| | | | |
|---|---|---|---|
| 1. | உயிர் எழுத்துக்கள் அ முதல்......ஔ வரை | ...... | 12 |
| 2. | மெய் எழுத்துக்கள் க் முதல்.......ன் வரை | ...... | 18 |
| 3. | உயிர் மெய்யெழுத்துக்கள் க முதல்......னௌ வரை | ...... | 216 |
| 4. | ஆய்த எழுத்து—ஃ | ...... | 1 |
| | ஆக மொத்தம் எழுத்துக்கள் | | 247 |

எழுத்துக்களை ஒரு வரிசைப் படுத்தி வைத்திருப்பதற்குத் தகுந்த காரணங்கள் உண்டு.

உயிரெழுத்துச் சேராமல் மெய்யெழுத்து, தனித்து இயங்காது. மெய்யெழுத்துடன் உயிரெழுத்துச் சேர்ந்து உயிர் மெய்யெழுத்து ஆகிறது.

**உதாரணம் :—**க் + ஆ = கா, ட் + ஒ = டொ முதலியன.

ஒன்றோ அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட எழுத்துக்கள் சேர்ந்தோ, ஒரு அர்த்தத்தைக் குறிக்குமானால் அது ஒரு **வார்த்தை** ஆகும்.

**உதாரணம் :—**ஈ, பூ, வா, போ, மாடு, குதிரை முதலியன.

மெய்யெழுத்தைத் தனியாக உச்சரிக்க முடியாது. ஆனால் ஒரு வார்த்தையில் மெய்யெழுத்து வந்தால் அதை உச்சரிக்க முடியும்.

**உதாரணம் :—**நாக்கு, குஞ்சு, பட்டம், சங்கு, வண்டி, கம்பம் முதலியன.

குறிப்பு :— அடுத்த பக்கத்திலுள்ள எழுத்து வரிசைகளைக் கவனித்துப் பாருங்கள்.

| ஃ | அ | ஆ | இ | ஈ | உ | ஊ |
|---|---|---|---|---|---|---|
| க் | க | கா | கி | கீ | கு | கூ |
| ங் | ங | ஙா | ஙி | ஙீ | ஙு | ஙூ |
| ச் | ச | சா | சி | சீ | சு | சூ |
| ஞ் | ஞ | ஞா | ஞி | ஞீ | ஞு | ஞூ |
| ட் | ட | டா | டி | டீ | டு | டூ |
| ண் | ண | ணா | ணி | ணீ | ணு | ணூ |
| த் | த | தா | தி | தீ | து | தூ |
| ந் | ந | நா | நி | நீ | நு | நூ |
| ப் | ப | பா | பி | பீ | பு | பூ |
| ம் | ம | மா | மி | மீ | மு | மூ |
| ய் | ய | யா | யி | யீ | யு | யூ |
| ர் | ர | ரா | ரி | ரீ | ரு | ரூ |
| ல் | ல | லா | லி | லீ | லு | லூ |
| வ் | வ | வா | வி | வீ | வு | வூ |
| ழ் | ழ | ழா | ழி | ழீ | ழு | ழூ |
| ள் | ள | ளா | ளி | ளீ | ளு | ளூ |
| ற் | ற | றா | றி | றீ | று | றூ |
| ன் | ன | னா | னி | னீ | னு | னூ |

வடமொழி

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| ஜ் | ஜ | ஜா | ஜி | ஜீ | ஜு | ஜூ |
| ஸ் | ஸ | ஸா | ஸி | ஸீ | ஸு | ஸூ |
| ஷ் | ஷ | ஷா | ஷி | ஷீ | ஷு | ஷூ |
| க்ஷ் | க்ஷ | க்ஷா | க்ஷி | க்ஷீ | க்ஷு | க்ஷூ |
| ஹ் | ஹ | ஹா | ஹி | ஹீ | ஹு | ஹூ |

எழுத்துக்கள்

| எ | ஏ | ஐ | ஒ | ஓ | ஔ |
|---|---|---|---|---|---|
| கெ | கே | கை | கொ | கோ | கௌ |
| ஙெ | ஙே | ஙை | ஙொ | ஙோ | ஙௌ |
| செ | சே | சை | சொ | சோ | சௌ |
| ஞெ | ஞே | ஞை | ஞொ | ஞோ | ஞௌ |
| டெ | டே | டை | டொ | டோ | டௌ |
| ணெ | ணே | ணை | ணொ | ணோ | ணௌ |
| தெ | தே | தை | தொ | தோ | தௌ |
| நெ | நே | நை | நொ | நோ | நௌ |
| பெ | பே | பை | பொ | போ | பௌ |
| மெ | மே | மை | மொ | மோ | மௌ |
| யெ | யே | யை | யொ | யோ | யௌ |
| ரெ | ரே | ரை | ரொ | ரோ | ரௌ |
| லெ | லே | லை | லொ | லோ | லௌ |
| வெ | வே | வை | வொ | வோ | வௌ |
| ழெ | ழே | ழை | ழொ | ழோ | ழௌ |
| ளெ | ளே | ளை | ளொ | ளோ | ளௌ |
| றெ | றே | றை | றொ | றோ | றௌ |
| னெ | னே | னை | னொ | னோ | னௌ |

எழுத்துக்கள்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஜெ | ஜே | ஜை | ஜொ | ஜோ | ஜௌ |
| ஸெ | ஸே | ஸை | ஸொ | ஸோ | ஸௌ |
| ஷெ | ஷே | ஷை | ஷொ | ஷோ | ஷௌ |
| க்ஷெ | க்ஷே | க்ஷை | க்ஷொ | க்ஷோ | க்ஷௌ |
| ஹெ | ஹே | ஹை | ஹொ | ஹோ | ஹௌ |

## அப்பியாசம்—3

## வாக்கியம்

வாக்கியத்தில் ஒரு குறிப்பிட்ட விஷயம் அல்லது கருத்து அடங்கியிருக்கும்.

**உதாரணம் :—** ராமன் வருகிறுன்.

இதில் **ராமன்** என்பது ஒருவனுடைய பெயர். அது ஒரு பெயரைக் குறிப்பதால் **பெயர்ச் சொல்** எனப்படும்.

**பெயரையோ, இடத்தையோ, பொருளேயோ** குறிக்கும் வார்த்தை அல்லது சொல், **பெயர்ச் சொல்** ஆகும்.

**உதாரணம் :—** ராமன், லட்சுமி, மனிதன், மாடு, ஆடு, புரு, மீன், ஊர், மதுரை, இந்தியா, கல், மரம், ஆகாயம், சூரியன் முதலியன.

"ராமன் வருகிறுன்" இதில் வருகிறுன் என்பது ஒரு செய்கையைக் குறிப்பதால் **வினைச் சொல்** எனப்படும். செய்கையைக் குறிக்கும் வார்த்தை அல்லது சொல் **வினைச் சொல்** ஆகும்.

**உதாரணம் :—** ராமன் **வருகிறுன்**. கமலா **நடக்கிறுள்**. மாடு **ஓடுகிறது**. புரு **பறக்கிறது**.

"ராமன் வருகிறுன்". இதில் ராமன் என்னும் பெயர்ச் சொல் **ஒருவனேக்** குறிக்கிறது. ஒருவரை அல்லது ஒன்றைக் குறிக்கும் பெயர்ச் சொல், **ஒருமைப்** பெயர்ச் சொல் ஆகும். ஒருவருக்கு மேற்பட்டவர்களேயோ, ஒன்றுக்கு மேற்பட்டவைகளேயோ குறிக்கும் பெயர்ச் சொல் **பன்மைப்** பெயர்ச் சொல் ஆகும்.

**உதாரணம் :—**

| ஒருமை | | பன்மை | ஒருமை | | பன்மை |
|---|---|---|---|---|---|
| மனிதன் | — | மனிதர்கள் | மாடு | — | மாடுகள் |
| பெண் | — | பெண்கள் | மரம் | — | மரங்கள் |
| பையன் | — | பையன்கள் | கல் | — | கற்கள் |

ஒருமை, பன்மைப் பெயர்ச் சொற்களுக்குத் தகுந்தபடி வினைச் சொற்களும் மாறும்.


**உதாரணம் :—**

| ஒருமை | பன்மை |
|---|---|
| மனிதன் போகிறுன். | மனிதர்கள் போகிறுர்கள். |
| பெண் வருகிறுள். | பெண்கள் வருகிறுர்கள். |
| மாடு ஓடுகிறது. | மாடுகள் ஓடுகின்றன. |
| புரு பறக்கிறது. | புருக்கள் பறக்கின்றன. |

# 1. கோவில்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| அடையாளம் | உத்ஸவங்கள் | மதத்தினர் | கவனித்து | சிலுவை |
| அதனுலேயே | திருவிழாக்கள் | காணலாம் | தொழுவதை | கைவிட |
| அநேக—சில | கட்டிடங்கள் | முஸ்லீம்கள் | சாலவும் | ஓது |
| விக்கிரஹம் | அவசியமாக | கிறிஸ்தவர் | ஆலயம் | சிலவற்றை |
| கருதுவார்கள் | கூடாரங்கள் | ஹிந்துக்கள் | இன்னும் | வேறு |
| பண்டிகைகள் | ஏற்படுகிறது | உணர்ச்சி | அல்லது | பக்தி |
| | நம்பினேர் | தவிர | | |


தினந்தோறும் காலையிலும் மாலையிலும் கடவுளை வணங்க வேண்டும். கடவுள் எங்கும் இருக்கிருர். நாம் செய்யும் ஒவ்வொரு காரியத்தையும் நமக்குத் தெரியாமலே கவனித்து வருகிருர். நாம் நல்ல காரியம் செய்தால் அவர் நம்மைக் காப்பாற்றுவார். ஆகையால் நாம் தினம் கடவுளை வணங்குவதுடன் நல்ல காரியங்களையே செய்ய வேண்டும்.




எல்லோரும் ஓர் இடத்தில் கூடி, கடவுளை வணங்குவதற்காகவே கோவில்களைக் கட்டியிருக்கிருர்கள். கோவிலுக்குப் போனுல் நமக்கு ஒருவித உணர்ச்சி ஏற்படுகிறது. அதனுலேயே நாம் பயத்தோடும் பக்தியோடும் கடவுளை வணங்குகிறேம்.

ஒவ்வொரு மதத்தினரும் ஒவ்வொரு விதமான கோவில் கட்டியிருக்கிருர்கள். ஹிந்துக்கள் கோவிலின்படத்தைப் பார். இதற்குப் பெரிய கோபுர வாசல் உண்டு. இவ்வழியே நுழைந்து, உள் வீதிகள் கடந்து உள்ளே சென்ருல், கடவுளின் விக்கிரஹத்தைக் காணலாம். சிவன் கோவிலில் முக்கிய விக்கிரஹத்திற்குச் சிவலிங்கம் என்று பெயர்.

வைஷ்ணவ ஆலயத்தில் முக்கிய விக்கிரஹத்திற்குப் பெருமாள் அல்லது விஷ்ணு என்று பெயர். இக் கோவில்களில் சில விசேஷ தினங்களில் உத்ஸவங்கள் அல்லது திருவிழாக்கள் நடக்கும்போது அநேக ஜனங்கள் கோவிலுக்குப் போவார்கள்.



இது முஸ்லீம்களின் கோவில் படம். இதை மசூதி என்பார்கள். இதில் கோபுர வாசல் கிடையாது. கூடாரங்கள் போலவும், ஸ்தம்பங்கள் போலவும் மேல் கட்டிடங்கள் இருக்கும். கூடாரம்போன்ற நடுக் கட்டிடத்தின்மேல் பிறைச் சந்திரன் அடையாளம் காணப்படும். வெள்ளிக்கிழமை கடவுளை மசூதியில் தொழுவதை முஸ்லீம்கள் மிகஅவசியமாகக் கருதுவார்கள். இவர்களுக்கு ரம்ஜான், பக்ரீத் என்ற முக்கியமான பண்டிகைகள் உண்டு.



இந்தக் கோவிலின் படத்தைப் பார். இது கோபுரம்போல் உயர்ந்து, அதன்மேல் சிலுவை நிறுத்தப்பட்டு இருக்கிறது. இதுதான் கிறிஸ்தவர் தொழும் கோவில். இதற்கு மாதா கோவில் என்று பெயர். கிறிஸ்தவர்கள் ஞாயிற்றுக்கிழமை தோறும் மாதா கோவிலுக்குப் போய்க் கடவுளைத் தொழுவார்கள். அன்று கடவுளைத் தொழுவதைத் தவிர, வேறு வேலைகள் செய்யமாட்டார்கள். கிறிஸ்தவர்களுக்குக் கிறிஸ்துமஸ், ஈஸ்டர் முதலியவை முக்கியமான பண்டிகைகள்.

மேற்கண்ட மூன்றுவிதக் கோவில்கள் தவிர, இன்னும் அனேக

விதக் கோவில்கள் உண்டு. ஆனால் யார் எந்தப் பெயர் கொடுத்து வணங்கினாலும், கடவுள் ஒருவர்தான். நாம் எந்த விதத்தில் தொழுதாலும், கருத்துடன் வணங்கினால் கடவுள் நம்மை ரக்ஷிப்பார்.

**ஆலயம் தொழுவது சாலவும் நன்று.**
**கடவுளை நம்பினோர் கைவிடப்படார்.**

### பயிற்சியும் கேள்வியும்

I (1) எழுத்து, வார்த்தை, வாக்கியம் இவைகளுக்கு உதாரணம் எழுது. (2) இப்பாடத்தில், வடமொழி எழுத்துக்கள் உள்ள வார்த்தைகளை எடுத்து எழுது. (3) எழுத்து இரட்டிக்கும் சில வார்த்தைகளை எழுது (உதாரணம் :—பக்கம்) (4) இன எழுத்துக்கள் உள்ள சில வார்த்தைகளை எழுது (உதாரணம் :—பந்தம்) (5) இப்பாடத்தில் வரும் ஒரே அர்த்தமுள்ள வார்த்தைகளை எடுத்து எழுதவும். (6) கீழ்க்கண்ட வார்த்தைகளை வாக்கியங்களிலமை :—தினந்தோறும், தெரியாமலே, செய்தால், காணலாம், அவசியமாக, விதமான, முக்கிய, வேறு, நன்று, நம்பினோர்.

II (1) இந்தப் பாடத்தில் எத்தனை விதமான கோவில்களைப் பற்றிப் படித்தீர்கள் ? அவை யாவை ? (2) கிறிஸ்தவர்களின் கோவிலை எப்படி அறியலாம்? (3) முஸ்லீம்களுக்கு முக்கிய பண்டிகைகள் என்னென்ன ? (4) ஹிந்துக்கள் கோவில்களில் உள்ள முக்கிய விக்கிரஹங்கள் யாவை ?

## அப்பியாசம்—4

## முற்றுப்புள்ளி

ஒவ்வொரு வாக்கியத்தின் கடைசியிலும் ஒரு புள்ளி இருக்கிறது பார். அதற்கு முற்றுப்புள்ளி என்று பெயர். ஒரு வாக்கியம் முடிவடைந்து மறு வாக்கியம் ஆரம்பிக்கு முன், முன் வாக்கியம் முடிவடைந்தது என்பதைக் குறிக்க, முற்றுப்புள்ளி வைக்க வேண்டியது அவசியம்.

கீழ்க்கண்ட பகுதியில் முற்றுப் புள்ளி வைக்கவேண்டிய இடங்களைக் கண்டு பிடித்து முற்றுப் புள்ளிகள் வைக்கவும் :—

தென்னை உயர்ந்து வளரும் இதற்குக் கிளைகள் இல்லை ஆனால் மட்டைகள் உண்டு தென்னைக்குப் பாளைகள் உண்டு .பாளையில் தேங்காய் காய்க்கும் இளந்தேங்காய் இளநீர் எனப்படும் வெயில் காலத்தில் இளநீர் குடிக்கலாம் தேங்காய் மிகவும் ருசியுள்ளது தென்னை இலைக்கு ஓலை என்று பெயர் ஓலைகளால் கீற்றுகள் பின்னலாம் தேங்காய் மட்டையால் கயிறு திரிக்கலாம் இதன் ஒவ்வொரு பாகமும் உபயோகமுள்ளது.

# 2. பாஷாபிமானம்

| | | | | |
|---|---|---|---|---|
| இரகசியமாக | மீறியவர் | உத்தரவு | இட்டார் | வேண்டுகோள் |
| ஆரம்பித்தார் | பாடுபட | தண்டிக்க | மறக்க | உபயோகித்து |
| பரிக்ஷித்தார் | மட்டுமே | இவ்வாறு | கண்ணீர் | கடுமையாய் |
| மெச்சினேன் | அவ்வாறே | சிறுமிகளும் | ராஜாங்க | கண்டிப்பாய் |
| விஷயத்தை | நிச்சயமாய் | விருத்தி | தைரியமுள்ள | முழந்தாளிட்டு |
| விஜயம் | நோக்கி | மாதிரி | மொழி | |
| சக்கரவர்த்தி(னி) | மனம் | சமயம் | விடை | |

நாம் பேசுவது தமிழ்ப் பாஷை. இம்மாதிரியே ஒவ்வொரு தேசத்தவரும் ஒவ்வொரு பாஷையைப் பேசுகிறார்கள். அவரவர்களுக்குத் தங்கள் பாஷை தாய்ப் பாஷையாகும். தாய்ப் பாஷையை விட்டு அந்நிய பாஷையில் பேச யாருக்கும் மனம் துணியாது. தன் தாய்ப் பாஷையில் ஒரு சிறுமி கொண்டிருந்த அபிமானத்தைக் கீழ்க்காணும் கதை நன்கு விளக்கும் :—

சுமார் ஐம்பது வருஷங்களுக்கு முன்பு அதிக பலம் கொண்டிருந்த ஜெர்மனியர், தமது தேசத்துக்கு அருகிலுள்ள **ஆல்ஸாஸ் லோரைன்** என்னும் சிறு நாட்டைப் பிடித்தனர். ஜெர்மன் சக்கரவர்த்தியாய் இருந்த **கெய்சர்**, லோரைன் ஜனங்களைக் கடுமையாய் நடத்த ஆரம்பித்தார். லோரைன் பாஷையில் ஒருவரும் பேசக்கூடாது என்றும் ஜெர்மன் பாஷையைத்தான் பேசவேண்டும் என்றும் கண்டிப்பாக உத்தரவு இட்டார். இவ்வுத்தரவை மீறியவர் கடுமையாய்த் தண்டிக்கப் பட்டனர்.

லோரைன் நாட்டினர் யாவரும் அவ்வாறே வருத்தத்துடன் தம் தாய்ப் பாஷையை விட்டு ஜெர்மன் பாஷையையே உபயோகித்து வந்தனர். பள்ளிக்கூடங்களில் ராஜாங்க பாஷையாகிய ஜெர்மன் பாஷையையே கற்பித்தார்கள். ஆனால் ஜெர்மனியருக்குத் தெரியாமலே பலர் தம் தாய்ப் பாஷையை மறக்காமல், இரவில் வெகு இரகசியமாகப் பேசிவந்தனர். தம் தாய்மொழியை மறக்க யார்தான் விரும்புவர்! இவ்வாறு முப்பது வருஷங்கள் சென்றன.

ஒரு சமயம் ஜெர்மன் சக்கரவர்த்தினியான கெய்ஸரினி, லோரைன் நாட்டிலுள்ள ஒரு பெண்பாடசாலைக்கு விஜயம் செய்தார். அப்பள்ளிக் கூடத்திலும் ஜெர்மன் பாஷை மட்டுமே கற்பிக்கப்பட்டு வந்தது. கெய்ஸரினியைக் கண்டதும் ஆசிரியைகளும் சிறுமிகளும் ஜெர்மன் பாஷையில் வந்தனங் கூறினர். கெய்ஸரினியும் சிறுமிகளைப் பரிக்ஷித்தார். அவரது கேள்விகளுக்கெல்லாம் தவறாது ஒரு சிறுமி விடையளித்தாள். அது கண்டு சந்தோஷமடைந்த கெய்ஸரினி அச்சிறுமியை நோக்கி, "குழந்தாய்! உன் புத்தியை மெச்சினேன். உனக்கு என்ன வேண்டும்? சொல் தருகிறேன்" என்றார்.



அதுகேட்ட சிறுமி, "தாயே! எனக்கு வேண்டியது ஒன்றிருக்கிறது. அதைத் தாங்கள் நிச்சயமாய் கொடுக்க முடியுமோ?" என்று கேட்டாள். கெய்ஸரினி இதைக் கேட்டு, சிறிது கோபத்துடன்,

"தைரியமுள்ள சிறுமியே! நீ யாருடன் பேசுகிருய் தெரியுமா? ஜெர்மன் சக்கரவர்த்தினியான நான், நீ எது கேட்டாலும் தருகிறேன், கேள்!" என்ருர்.

உடனே சிறுமி முழந்தாளிட்டுக் கண்ணீர் விட்டு, "தாயே! எந்தப் பாஷையை நாங்கள் பேசக்கூடாது என்று உத்தரவு செய்யப் பட்டிருக்கிறதோ, அந்த எங்கள் தாய்ப் பாஷையை நாங்கள் பேச உத்தரவு கொடுக்க வேண்டும். பள்ளிக்கூடங்களிலும் எங்கள் தாய்ப் பாஷைகளிலேயே பாடங்கள் நடக்க வேண்டும். இதுதான் எனது வேண்டுகோள்" என்று வேண்டினுள்.

கெய்ஸரினி இதைக் கேட்டுச் சிறுமியின் தைரியத்தையும் பாஷாபிமானத்தையும் மெச்சினர். கெய்ஸரிடம் நடந்த விஷயத்தைச் சொல்லி சிறுமியின் வேண்டுகோளின்படியே உத்தரவுகள் போடச் செய்தார். ஒரு சிறுமியின் பாஷாபிமானத்தால் அத்தேசத்திற்கே நன்மை ஏற்பட்டது.

நாமும் நம் தாய்மொழியான தமிழ் மொழியைக் கற்று அதை விருத்தி செய்யப் பாடுபடவேண்டும்.

### பயிற்சியும் கேள்வியும்

I (1) பெயர்ச் சொற்களில் ஐந்து எழுது. (2) ஒருமை, பன்மை கூறு:—நாம், சிறுமி, ஆசிரியைகள், நீ, பாஷை. (3) ஒரே அர்த்தமுள்ள சில வார்த்தைகளை எடுத்து எழுது. (4) பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் உபயோகி:—இம் மாதிரியே, துணியாது, சுமார், மறக்க, ஆரம்பித்தார், கண்டிப்பாக, அவ்வாறே, இரகசியமாக, மீறியவர், தைரியமுள்ள. (5) பிரித்து எழுது:—பாஷாபிமானம், மனந்துணியாது, விடையளித்தாள், சந்தோஷமடைந்த, தைரியமுள்ள.

II (1) தாய்ப் பாஷை என்ருல் என்ன? (2) சக்கரவர்த்தினியிடம் சிறுமி வேண்டிக் கொண்டதென்ன? (3) இக்கதையால் நீ அறிந்துள்ள நீதி என்ன?

# 3. செந்தமிழ் நாடு

செந்தமிழ் நாடெனும் போதினிலே—இன்பத்
தேன் வந்து பாயுது காதினிலே—எங்கள்
தந்தையர் நாடென்ற பேச்சினிலே—ஒரு
சக்தி பிறக்குது மூச்சினிலே. 1

காவிரி தென் பெண்ணை பாலாறு—தமிழ்
கண்டதோர் வையை பொருனை நதி—யென
மேவிய யாறு பலவோடத்—திரு
மேனி செழித்த தமிழ் நாடு. 2

நீலத் திரைக்கடல் ஓரத்திலே—நின்று
நித்தம் தவம் செய் குமரியெல்லை—வட
மாலவன் குன்றம் இவற்றிடையே—புகழ்
மண்டிக் கிடக்கும் தமிழ் நாடு. 3

கல்வி சிறந்த தமிழ் நாடு—புகழ்க்
கம்பன் பிறந்த தமிழ்நாடு—நல்ல
பல்விதமாயின சாத்திரத்தின்—மணம்
பாரெங்கும் வீசுந் தமிழ் நாடு. 4

வள்ளுவன் தன்னை உலகினுக்கே—தந்து
வான்புகழ்கொண்ட தமிழ்நாடு—நெஞ்சை
அள்ளும் சிலப்பதிகாரமென்றோர்—மணி
யாரம் படைத்த தமிழ் நாடு. 5

முத்தமிழ் மாமுனி நீள் வரையே—நின்று
மொய்ம் புறக் காக்குந் தமிழ் நாடு—செல்வம்
எத்தனையுண்டு புவிமீதே—அவை
யாவும் படைத்த தமிழ் நாடு. 6

—பாரதியார்

# 4. பனையும் ஆலும்

| | | | | |
|---|---|---|---|---|
| அதிசயப்பட்டான் | அப்பொழுது | தெள்ளிய | மன்னர் | அடியில் |
| இளைப்பாறினான் | அமர்ந்து | அண்ணல் | ஆயினும் | பரந்த |
| ஞாபகப்படுத்தி | படைப்பின் | தேம்படு | திடீரென | திரண்ட |
| காயப்படுத்தும் | நுண்ணிதே | வாலிபன் | பிளந்து | நடுவே |
| பெருமையை | நிழலில் | தூரம் | அணி | ஆள் |
| படை | புரவி | வான் | வளம் | |

பங்குனி மாதம் பகல் பன்னிரண்டு மணிக்கு ராமசுவாமி என்ற ஒரு வாலிபன் ஒரு பனங்காட்டுக்கு நடுவே போய்க் கொண்டிருந்தான். வெயிலோ கொடுமையாக இருந்தது. அவனுக்கோ பசி அதிகம். திடீரென ஒரு பனையின் அடியில் ஒரு திரண்ட பனம்பழத்தைக் கண்டான். அதை எடுத்தான். பனையின் சிறிய நிழலில் இருந்து அதைத் தின்ன நினைத்தான். ஆனால் அந் நிழல் அவனுக்குப் போதுமானதாயில்லை. அதனால் அவன் மனம் வருந்தி,



"தேம்படு பனையின் திரள்பழத் தொருவிதை
வானுற ஓங்கி வளம்பெற வளரினும்
ஒருவர்க் கிருக்க நிழலாகாதே"

என்று தான் பாடத்தில் படித்த பாட்டை ஞாபகப் படுத்திக் கொண்டே அவ்விடம் விட்டுப் புறப்பட்டான்.

சிறிது தூரம் சென்றதும் ஒரு பெரிய ஆல மரத்தைக் கண்டான். கண்டதும் ஓடி அதன் நிழலில் அமர்ந்து இளைப்பாறினான். ஆலமரத்தின் பரந்த கிளைகளையும் குளிர்ந்த நிழலையும் கண்டு அதிசயப்பட்டான். அப்பொழுது வெயில் அதிகமாயிருந்தபடியால் அவ்வழியாய் வந்தவர்களும், அக்கம் பக்கத்தில் வேலை செய்து கொண்டிருந்தவர்களும், ஆடு மாடுகளுடன் அதை மேய்ப்பவர்களும் அந்தக் குளிர்ந்த நிழலில் வந்து, தங்கினர். சிறுவர்களும் ஓடியாடி விளையாடினர். பலவிதப் பறவைகள் அம்மரத்தின் கிளை

களில் கூடுகட்டியிருந்தன. இவைகளைக் கண்டு சந்தோஷப்பட்ட அவன்மேல் ஒரு ஆலம்பழம் விழுந்தது. அதை எடுத்துப் பிளந்து அதன் விதைகளை நோக்கினான். நோக்கியதும்,

"தெள்ளிய ஆலின் சிறுபழத் தொருவிதை
தெண்ணீர்க் கயத்துட் சிறுமீன் சினையினும்
நுண்ணிதே ஆயினும் அண்ணல் யானை
அணிதேர்ப் புரவி ஆட்பெரும் படையொடு
மன்னர்க்கிருக்க நிழலாகும்மே"

என்ற பாட்டை ஞாபகப்படுத்திக் கொண்டான்.



"அநேக ஜனங்களும், பிராணிகளும் தங்கும் ஆல மரத்திற்குப் பழத்தைப் பெரிய தாக வைத்திருந்தால், யார் மேலாவது விழுந்து காயப் படுத்து மல்லவா? அதனால் இம்மரத்தின் நிழல் யாருக்கும் உபயோகமில்லாது போகுமே. இதனால்தான் கடவுள் இப் பெரிய மரத்திற்குச் சிறிய விதையை ஏற்படுத்தினர் போலும்" என்று கடவுளது படைப்பின் பெருமையைப் புகழ்ந்துகொண்டே சென்றான்.

### பயிற்சியும் கேள்வியும்

I (1) வினைச் சொற்கள் ஐந்து எழுது. (2) ஒருமை, பன்மைகளை எடுத்துக் கூறு:—வாலிபன், எடுத்தான், பழம், சிறுவர்கள், விளையாடினர், விழுந்தது, பிராணி கள், இருந்தன, கிளைகள், சென்றான். (3) பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் உபயோகி:—நடுவே, கொடுமையாக, திடீரென, அடியில், ஞாபகப்படுத்தி, அப் பொழுது, பிளந்து, உபயோகம், பெருமையை, புகழ்ந்துகொண்டே. (4) பிரித்து எழுது:—போய்க்கொண்டிருந்தான், போதுமானதாயில்லை, ஓடியாடி, கட்டியிருந்தன, உபயோகமில்லாது. (5) பின்வரும் வாக்கியத்தை வார்த்தையாகப் பிரித்து எழுது:— பங்குனி மாதம் பகல் பன்னிரண்டு மணிக்கு இராமசாமி என்ற ஒரு வாலிபன் ஒரு பனங்காட்டுக்கு நடுவே போய்க் கொண்டிருந்தான்.

II. (1) வெயில் அதிகமாயிருக்கும் மாதத்தையும் நேரத்தையும் கூறு. (2) பனையைப் பற்றி உனக்குத் தெரிந்ததைக் கூறு. (3) ஆலமரத்தைப் பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது. (4) ஆலம்பழம், பனம்பழம், இவைகளுக்குள்ள வித்தியாசங்களைக் கூறு.

## 5. போலீஸ்காரன்

| | | | | |
|---|---|---|---|---|
| ஆபத்து | ஜில்லா | இலாகா | தலைப்பாகை | டிப்டிசூப்பிரன்டென்டெண்டு |
| பழுப்பு | நிறுத்தி | பலவித | சமாதானம் | சூப்பிரன்டென்டெண்டு |
| இதற்காக | சச்சரவு | சேதம் | போலீஸ்காரன் | சர்க்கிள் இன்ஸ்பெக்டர் |
| அடிக்கடி | களவு | நகரம் | நேரிடுவது | உத்தியோகஸ்தர் |
| சப்-இன்ஸ்பெக்டர் | | மோதிக்கொள்ளாமல் | | சிக்கிக்கொள்ளாமல் |



மணி:—அப்பா! இதோ சிவப்புத் தலைப்பாகை வைத்துக்கொண்டு ஒருவன் நடுத்தெருவில் நிற்கிறானே, இவன் யார்?

தந்தை:—மணி! இவன் ஒரு போலீஸ்காரன்.

மணி:—அப்பா! இவன் எதற்காக இங்கே நின்று கொண்டிருக்கிறான்? ஏன் அடிக்கடி கையை உயர்த்துகிறான்?

தந்தை:—மணி! இவன் இப்பொழுது நான்கு வீதிகள் கூடும் இடத்தில் நிற்கிறான். அங்கும் இங்கும் ஓடும் பலவித வண்டிகள் ஒன்றோடொன்று மோதிக்கொள்ளாமலும், வழியில் நடப்போர் வண்டிச் சக்கரங்களில் சிக்கிக் கொள்ளாமலும் காக்க வேண்டியது இவனுடைய வேலை. பெரிய நகரங்களில் மோட்டார் வண்டிகளும்,

குதிரை வண்டிகளும், சைக்கிள் முதலிய வண்டிகளும் அடிக்கடி போவதும் வருவதுமாய் இருக்கும். அவைகள் ஒன்றேடொன்று மோதிக்கொண்டால், அதிகமான உயிர்ச் சேதமும் பொருட் சேதமும் ஏற்படும். அதைத் தடுக்க இவன் ஒரு சமயத்தில் ஒரு பக்கத்தில் செல்லும் வண்டிகளேயே போக விடுவான். அந்தச் சமயத்தில் மற்றப் பக்கங்களில் வரும் வண்டிகளே, தன் கையை உயர்த்தி நிறுத்தி விடுவான். இதற்காகவே இவன் அடிக்கடி கையை உயர்த்துகிருன்.

மணி :—அப்பா ! இவன் வேறு என்னென்ன வேலைகள் செய்வான் ?

தந்தை :—மணி! தெருக்களில், ஜனங்கள் அசுத்தம் செய்யாமலும், சண்டை சச்சரவு நடக்காமலும் கவனிக்க வேண்டியது இவனுடைய வேலேயே. இராக் காலங்களில் களவு நடவாமல் ஊரைச் சுற்றி வந்து காவல் செய்வதும் போலீஸ்காரன் வேலேயே. ஜனங்களின் உயிர், பொருள் இவைகளேப் பல விதத்திலும் காப்பாற்றவும் எங்கும் சமாதானத்தை நிலே நிறுத்தவுமே போலீஸ்காரர்கள் இருக்கின்றனர்.

மணி :—அப்பா ! நகரங்களில் தான் போலீஸ்காரர்கள் இருக்கிருர்களா ? கிராமங்களில் இல்லேயா ? இவர்கள் செய்யும் வேலேயைக் கவனிப்பவர் யார் ?

தந்தை :—மணி ! நகரங்களேத் தவிர பெரிய கிராமங்களுக்கும் போலீஸ்காரர்கள் உண்டு. அங்கு ஒரு போலீஸ் ஸ்டேஷனும் இருக்கும். அந்த ஸ்டேஷனில் சுமார் பத்து போலீஸ்காரர்கள் இருப்பார்கள். அவர்களுக்கு மேல் ஒரு சப்-இன்ஸ்பெக்டர் உண்டு. இவர்கள் பக்கத்திலுள்ள சிறிய கிராமங்களேயும் கவனித்துக்கொள்வார்கள். பெரிய நகரங்களில் நான்கு ஐந்து போலீஸ் ஸ்டேஷன்கள் உண்டு. ஒவ்வொன்றிலும் ஒரு சப் இன்ஸ்பெக்டரும் போலீஸ்காரர்களும் இருப்பார்கள். இவர்களுக்கு மேல் சர்க்கிள் இன்ஸ்பெக்டர், டிப்டி சூப்பிரன்டென்டெண்டு, ஜில்லா சூப்பிரன்டென்டெண்டு முதலிய பெரிய உத்தியோகஸ்தர்கள் உண்டு. கீழ் உத்தியோகஸ்தர்கள் செய்யும் வேலேயை, இவர்கள் கவனிப்பார்கள்.

**மணி** :—அப்பா ! போலீஸ்காரரை நாம் எப்படித் தெரிந்துகொள்ளலாம்?

**தந்தை** :—மணி ! அவர்கள் உடுக்கும் உடையாலேயே தெரிந்து கொள்ளலாம். அதோ நிற்கும் போலீஸ்காரனைப் பார். அவன் வெள்ளை உடையும், சிவப்புத் தலைப்பாகையும் போட்டுக்கொண் டிருக்கிறான். சில சமயங்களில் வெள்ளை உடைக்குப் பதிலாக ஒரு விதப் பழுப்பு (காக்கி) நிறமுள்ள உடையை அணிந்து கொள்வதும் உண்டு.

**மணி** :—ஏன் அப்பா ! இந்த ஏற்பாடுகளெல்லாம் செய்தவர் யார் ?

**தந்தை** :—மணி ! நமது நன்மைக்காகவே, நமது அரசாங்கத்தார் போலீஸ் இலாகாவை ஏற்படுத்தி இருக்கிறார்கள்.

**மணி** :—அப்பா ! இவர்கள் செய்யும் வேலைகள் மிகவும் கஷ்டமானவை அல்லவா ?

**தந்தை** :—ஆம், இவர்கள் செய்யும் வேலைகள் மிகவும் கஷ்டமானவை தான். சில சமயங்களில் இவர்களுக்கும் ஆபத்து நேரிடுவது உண்டு. அப்படிப்பட்ட, சமயங்களில் நாம் இவர்களுக்கு உதவி செய்யவேண்டும்.

### பயிற்சியும் கேள்வியும்

I (1) இப்பாடத்திலிருந்து ஐந்து பெயர்ச் சொற்களும், ஐந்து வினைச் சொற்களும் எடுத்து எழுது.

(2) அவைகளை உன் சொந்த வாக்கியங்களில் உபயோகி.

(3) கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை உபயோகித்து எழுது.

(ஸ) போலீஸ்காரன் நான்கு வீதிகள் ——— இடத்தில் நிற்கிறான்.

(ரி) இராக்காலங்களில் களவு ——— ஊரைச் சுற்றி ——— செய்வது போலீஸ்காரர் வேலையே.

(க) பெரிய நகரங்களில் நாலைந்து போலீஸ் ——— உண்டு.

(4) பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் அமை :—

(1) அடிக்கடி (2) மோதிக்கொள் (3) சிக்கிக்கொள் (4) சேதம்
(5) காப்பாற்ற (6) கஷ்டமானது (7) ஆபத்து (8) உதவி

II (1) போலீஸ்காரன் என்பதை எப்படி அடையாளம் தெரிந்துகொள்வாய்?

(2) அவனுடைய முக்கிய வேலைகள் என்னென்ன ?

III பின்வரும் வாக்கியங்களில் உள்ள பெயர்ச் சொற்களைப் பன்மையாக மாற்றி அந்த வாக்கியங்களை எழுது :—

(1) நாய் குரைக்கிறது (2) பையன் பாடம் படித்தான் (3) குதிரை வேகமாய் ஓடும்.

IV பிரித்து எழுது :—


(1) ஒன்றோடொன்று (2) என்னென்ன (3) பக்கத்திலுள்ள.

# 6. மழை

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நீர்நிலைகள் | ஊற்றுக்கள் | உற்பத்தி | பஞ்சம் | சொட்டு | சேய் |
| ஆகாயத்தில் | கொதிக்க | போலவும் | எழும்பி | நதிகள் | மாரி |
| வெப்பத்தினால் | கிளம்பும் | வறண்டு | மறுபடி | முகம் | ஏது |
| பிரதேசங்கள் | பெய்வதை | கலந்து | ஓடைகள் | நனைந்த | உலர |
| விவசாயம் | பனிக்கட்டி | ஆவியாக | | | |

மழை பெய்வதை நீங்கள் எல்லோரும் பார்த்திருப்பீர்கள். தண்ணீரானது எப்படி மழையாகப் பெய்கிறது? ஆகாயத்தில் தண்ணீர் ஏது?

தண்ணீரில் நனைந்த துணிமணிகளை நாம் வெயிலில் உலரவைக்கிறோம். அத் துணிமணிகளிலுள்ள தண்ணீர் கீழே விழவில்லை. எங்கே போய்விட்டது? சூரிய வெப்பத்தினால் அவைகளிலுள்ள தண்ணீர் ஆவியாக மாறி, காற்றில் கலந்துவிட்டது. தண்ணீரை ஒரு பாத்திரத்தில் கொதிக்கவைத்தால் தண்ணீர் ஆவியாக மாறி உயர எழும்பிப் போவதைக் காணலாம். அந்த ஆவி மறுபடியும் தண்ணீராக மாறக்கூடியது. அந்தப் பாத்திரத்திலிருந்து கிளம்பும் நீராவி படும்படி ஒரு கற்பலகையைப் பிடி. சீக்கிரத்தில் அந்தக் கற்பலகையிலிருந்து தண்ணீர் சொட்டுச் சொட்டாக விழுவதைப் பார்க்கலாம்.



உலகத்தில் மூன்றுபாகம் நீர்ப்பாகமும், ஒரு பாகம் தரைப் பாகமுமாயிருக்கிறது. சூரிய வெப்பத்தினால் நீர்நிலைகளிலுள்ள தண்ணீர் ஆவியாக மாறுகிறது. இந்த ஆவி, காற்றைவிட இலேசானது. ஆகையால் அது உயரக் கிளம்பி, ஆகாயத்தில் போய்ச் சேருகிறது. இவ்வாறு சேர்ந்த ஆவிகள் அதிகமான தண்ணீரை அடக்கிக் கொண்டிருக்கும்போது சிறிது கருமை நிறமாய்த் தோன்றும். அதைத்தான் **மேகம்** என்று சொல்லுகிறோம். மேகத்திலுள்ள தண்ணீரின் அளவுக்குத் தக்கபடி நிறம் வேறுபடும். இந்த மேகங்கள் மறுபடியும் தண்ணீராக மாற வேண்டுமானால் இந்த மேகம் ஒரு குளிர்ந்த இடத்தில் சேரவேண்டும்; அல்லது இந்த மேகத்தின்மேல் குளிர்ந்த காற்றுப் பட வேண்டும். இவைகளில் ஏதாவது ஒன்று நடக்கும்போது மேகம் குளிர்ந்து மழையாகப் பெய்யும்.

இவைகள் அடிக்கடி மலைகளின்மேல் பெய்வதால் நீர் ஊற்றுக்களும், ஓடைகளும், நதிகளும் உற்பத்தியாகின்றன. இவைகளின் மூலம் தண்ணீர், விவசாயம் செய்யவும், ஜீவராசிகள் குளிக்கவும், குடிக்கவும் உதவுகிறது. மழையில்லாவிட்டால், பூமியிலுள்ள நீரூற்றுக்கள் வறண்டுபோகும். தண்ணீர் இல்லாது விவசாயம் நடக்காது. குடிக்கத் தண்ணீர் கிடைக்காது. எங்கும் பஞ்சம் ஏற்படும். ஜீவராசிகள் உயிர் வாழ முடியாது. தண்ணீர் எவ்வளவு இருந்தாலும், மழையில்லாவிட்டால் பயிர் வகைகள் தகுந்த பலனைக் கொடுக்கா. இது பற்றியே "மழை முகம் காணாப் பயிர் போலவும், தாய் முகம் காணாச் சேய் போலவும்" என்று நாம் சொல்லுகிறோம்.

மழை ஜலம் தரையில் விழுவதற்கு முன் மிகவும் சுத்தமாயிருக்கும். அதற்கு நிறமும் ருசியும் இல்லை. தரையில் விழுந்த பின், அந்தத் தரையின் தன்மைக்கு ஏற்றபடி அதற்கு நிறமும் ருசியும் ஏற்படும். தண்ணீரானது ஆவியாக மாறுகிறது, மேகமாக மாறுகிறது, பின்பு தண்ணீராக மாறுகிறது, மிகவும் குளிர்ந்த பிரதேசங்களில் தண்ணீர் பனிக்கட்டிகளாகவும் மாறுகிறது. ஆகவே தண்ணீர் சமயத்திற்குத் தகுந்தபடி தன் உருவத்தை மாற்றிக்கொள்ளுகிறது.

**" மாரியல்லது காரியமில்லை "**

### பயிற்சியும் கேள்வியும்

I (1) பின்வரும் வார்த்தைகளிலிருந்து உண்டாகும் பலவிதமான வார்த்தைகளையும் எழுது :—பார், வை, போ, நில். (2) ஒரே அர்த்தமுள்ள வார்த்தைகள் சில எழுது. (3) தண்ணீர் ஓடுகிறது. தண்ணீர்—, தண்ணீர்—, தண்ணீர்—, தண்ணீர்—, தண்ணீர்—. (4) கோடிட்ட இடங்களில் தகுந்த வினைச் சொற்களை அமைக்கவும். —பெய்கிறது, தண்ணீர்—மாறுகிறது, தண்ணீர்—விழுகிறது, தண்ணீர்—ஓடுகிறது, தண்ணீர்—பெறுகிறது.

II (1) மழை எப்படி உண்டாகிறது என்பதைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் எழுது. (2) மழையினுல் நாம் அடையும் நன்மைகள் யாவை? (3) தண்ணீர் என்னென்ன மாறுதல்கள் அடைகிறது? எப்படி?

III சேர்த்து ஒரே வாக்கியமாக எழுது. (1) மழை பெய்கிறது, தண்ணீர் ஓடுகிறது. (2) மழைத் தண்ணீர் தரையின்மேல் விழுகிறது, அது அசுத்தமாகிறது. (3) தண்ணீர் ஆவியாக மாறும். தண்ணீர் பனிக்கட்டியாக மாறுகிறது.

## 7. அதிக ஆசை ஆகாது

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பட்டுப்போன | குணத்தை | கஷ்டம் | நஷ்டம் | சங்கதி | மூழ்கி |
| வாழ்ந்தான் | பொறுமை | தேவதை | கோடரி | வெட்டி | நழுவி |
| நியாயமான | நினைத்து | திருப்தி | இழந்து | போய் | ஆசை |
| வருத்தம் | அம்மணி | அழுது | | | |

பாசூர் என்ற கிராமத்தில் பரமன், ராமன் என்ற இரு விறகு வெட்டிகள் இருந்தனர். பரமன் தனக்குக் கிடைக்கும் பணத்தைக் கொண்டு திருப்தி அடைவான். தினந்தோறும் தான் கொண்டுவரும் விறகுக்கட்டை நியாயமான விலைக்கு விற்று, தன் குடும்பத்தைக் காப்பாற்றிச் சந்தோஷமாய் வாழ்ந்து வந்தான். ஆனுல் ராமனே தன்னுடைய விறகுக்கட்டை அதிகமான விலைக்குத்தான் விற்பான். அப்படி விற்றும் அவனுக்குத் திருப்தி ஏற்படவில்லை. இன்னும் அதிகப்பணம் கிடைக்கவில்லையே என்று வருத்தப்படுவான்.

ஒரு நாள் பரமன் வழக்கம்போல் விறகுவெட்டப் பக்கத்திலுள்ள காட்டுக்குச் சென்ருன். ஒரு ஏரிக்கரையிலிருந்த பட்டுப்போன மரம் ஒன்றைத் தன் கோடரியால் வெட்ட ஆரம்பித்தான். அவ்வாறு வெட்

டும்போது, அவனது கோடரி கைநழுவி ஏரிக்குள் விழுந்து விட்டது. கோடரியில்லாமல் எப்படி விறகு வெட்டித் தன் குடும்பத்தைக் காப்பாற்றுவது என்று நினைத்து அழுதுகொண்டிருந்தான். அப்போது அக்காட்டில் இருந்த வனதேவதை, அவன் முன் தோன்றி, "அப்பா! ஏன் அழுகிறாய்?" என்று கேட்டது. அதற்குப் பரமன், "தாயே! என்னுடைய கோடரி இந்த ஏரியில் விழுந்துவிட்டது. இனிமேல் விறகு வெட்ட முடியாதே என்று நினைத்துத்தான் அழுகிறேன்?" என்றான்.



அதைக் கேட்ட வனதேவதை உடனே ஏரியில் மூழ்கி, ஒரு தங்கக் கோடரியைக் கொண்டுவந்து காட்டி, "அப்பா! இதுவா உன் கோடரி?" என்று கேட்டது. அதைக்கண்ட பரமன், "அம்மணி!

இது என்னுடையதல்ல" என்றான். மறுபடியும் வனதேவதை ஏரியில் மூழ்கி, ஒரு வெள்ளிக் கோடரியைக் கொண்டுவந்து காட்டியது. பரமன், "இதுவும் எனது அல்ல" என்றான். பிறகு வனதேவதை மூன்றும் முறையாக, அவனுடைய இரும்புக் கோடரியையே கொண்டுவந்து காட்டியது. அதைக் கண்டதும் பரமன் சந்தோஷித்து, "அம்மா! இதுவே என் கோடரி" என்று கூறி, அதை வாங்கக் கையை நீட்டினன். வனதேவதையும் அவனுடைய நல்ல குணத்தைக் கண்டு அவனுக்கு அம் மூன்று கோடரிகளையும் கொடுத்து மறைந்தது. பரமனும் தங்கக் கோடரியையும் வெள்ளிக் கோடரியையும் விற்று சுகமாக வாழ்ந்தான்.

இந்தச் சங்கதியைக் கேட்ட ராமன், பொறாமை கொண்டு தானும் அவ்வாறே செய்து பணக்காரனாக ஆசைப்பட்டான். அதே ஏரிக்கரைக்குச் சென்று, தன் கோடரியை ஏரியில் எறிந்துவிட்டு அழ ஆரம்பித்தான். வனதேவதையும் தோன்றியது. முன்போலவே ஒரு தங்கக் கோடரியைக் கொண்டுவந்து காட்டியது. பேராசை பிடித்த ராமனே அது தன்னுடையதல்லவென்று சொல்லவில்லை. "அம்மா! இதுதான் என்னுடைய கோடரி" என்று பொய்கூறி ஆசையோடு அதை வாங்கக் கையை நீட்டினன்.

உடனே வனதேவதை அவனை நோக்கி, "அடே! நீ உன் கோடரியை ஏரியில் வேண்டுமென்றே போட்டுவிட்டு, தவறிவிட்டது என்று பொய் கூறினய். இப்போது இந்தத் தங்கக் கோடரி உன்னுடையது என்று பேராசையுடன் வாங்கக் கை நீட்டுகிறாய். நீ பெரும் பொய்யன்; பேராசைக்காரன். ஆகையால் உனக்கு உன்னுடைய இரும்புக் கோடரியும் கிடைக்காது, போய்விடு" என்று கூறி மறைந்து விட்டது. ராமன் அதிக ஆசைப்பட்டதனல் தன்னுடைய கோடரியையும் இழந்துவிட்டு வீட்டுக்குத் திரும்பினன். இவ்வாறு அவன் பேராசைப்பட்டதால், கஷ்டப்பட்டு சம்பாதிக்கும்படி நேரிட்டது. அதிக ஆசைப்படாத பரமனே சந்தோஷமாக வாழ்ந்தான்.

பேராசை பெரு நஷ்டம்

### பயிற்சியும் கேள்வியும்

I (1) பின்வரும் வார்த்தைகளை வைத்து வாக்கியங்கள் உண்டாக்கு:— நியாயம், விற்பான், வருத்தப்படுவான், நழுவி, மூழ்கி, மறைந்தது, பிடித்த, சம்பாதிக்கும்படி (2) பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களைப் பூர்த்திசெய்:—அவன் விறகு வெட்டுகிறான்.

நான் விறகு—. நீ விறகு—. நான் விறகு—.
நாங்கள் விறகு—. நீங்கள் விறகு—. அவர்கள் விறகு—.

II கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை அமை:—

கோடரி கை நழுவி—விழுந்தது. வனதேவதை ஒரு—கோடரியைக் காட்டியது. பரமன் அது தன்னுடையது—என்றான். ராமன் அதிக—பட்டான். ராமன் தன் இரும்புக் கோடரியையும்—.

III (1) பின் வருபவைகளைப்பற்றி ஐந்து வாக்கியங்கள் கூறு:—காடு, குளம், மரம், கோடரி. (2) இந்தக் கதையைச் சுருக்கி எழுது. (3) இக் கதையினால் நீ அறிந்துகொண்ட நீதி என்ன?

# 8. ஔவையார்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| செல்வவந்தனாய் | தரித்திரம் | அழிக்க | தடவை | அரிய | உலை |
| விசனத்துடன் | தீரும்படி | பாணர் | சிறந்த | புகழ் | கரை |
| கலியாணம் | தவிர்த்து | சகியாமல் | அறிவு | பருவம் | நீங்கி |
| சொந்தக்காரி | அரசர்கள் | அவதாரம் | அற்புத | புரண்டு | கல்வி |
| நெல்லிக்கனி | உலகத்திற்கு | அத்தாட்சி | கொல்லையில் | நெடுநாள் | புலவர் |
| குறப்பெண் | உருவெடுத்தாள் | | | | |

ஔவையார் சோழ தேசத்தில் பிறந்தவர். இவர் தந்தை பெயர் பகவன். இவர் தாய் பெயர் ஆதி. இவர் பிறந்த உடனேயே, இவரது பெற்றோர் இவரை ஓரிடத்தில் விட்டுச் சென்றனர். ஒரு பாணர் இவரை எடுத்து வளர்த்தார். குழந்தையும் பெரிய பெண் ஆயிற்று. கலியாணப் பருவம் வந்தது. வளர்த்தவர்கள் கலியாணத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். ஔவையோ கலியாணத்தை விரும்பவில்லை. கலியாணப் பெண் கிழவி உருவெடுத்தாள். கலியாணமும் நின்றது. பின் இவர் கலியாணமே செய்துகொள்ள வில்லை.

ஔவையோ சிறு வயது முதல் கல்வியிலும் அறிவிலும் நாளுக்கு நாள் விருத்தியடைந்து வந்தார். இவர் புகழ் நாடெங்கும் பரவியது. சிறந்த புலவரானர். அதனல் இவரை சரஸ்வதியின் அவதாரம் என்றும் நினைத்தார்கள். அநேக அரசர்களும் இவரை மரியாதையுடனும் அன்புடனும் நடத்தினர்கள். அரசர்களுக்குள் ஏற்படும் சச்சரவுகளில் இவரே பலதடவைகள் சமாதானம் செய்திருக்கிறர். இவர் அதிகக் காலம் உயிரோடிருந்தால் உலகத்திற்கு நன்மை ஏற்படும்என்று அநேகர் நினைத்தார்கள். ஒரு சமயம் அதிகமான் என்னும் அரசனுக்கு ஓர் அற்புத நெல்லிக்கனி கிடைத்தது. அதைத் தின்றவர் நெடுநாள் உயிரோடிருக்கலாம். இந்தக் கனியை அதிகமான் தான் உபயோகித்துக்கொள்ளாமல் ஔவையாருக்குக் கொடுத்தான். ஔவையாரும் அதை உண்டு நெடுநாள் வாழ்ந்திருந்தார்.



ஒரு கிராமத்தில் ஒரு வீட்டில் கொல்லேயில் ஒரு பலாமரம் இருந்தது. அதைச் சிலர் வெட்டிவிட்டனர். அந்த மரத்திற்குச் சொந்தக்காரியான குறப் பெண் அதற்காக மிகவும் விசனத்துடன் அழுது கொண்டிருந்தாள். ஔவையார் இதைக்கண்டு மனம் சகியாமல் ஒரு பாட்டுப் பாடினர். மரம் தளிர்த்து வளர்ந்து ஓங்கி நின்றது.

ஒரு தடவை ஔவையார் பசியாய் இருந்தார். அவரது பசியாற ஒரு வேளாளன் கஞ்சி வார்த்தான். அவனுடைய கஷ்டம் தீரும்படி ஔவையார் ஒரு பாட்டுப் பாடினர். அவன் தரித்திரம் நீங்கிச் செல்வவந்தனுய் நெடுங்காலம் வாழ்ந்து வந்தான்.

இன்னொரு தடவை ஔவையார் குளிரால் மிகவும் கஷ்டப் பட்டார். ஒருவரும் அவருக்கு உதவி செய்யவில்லை. தஞ்சையிலுள்ள ஒரு கொல்லர் தன் உலைப்பக்கமாய் ஔவையாரை உட்காரச் செய்து குளிரைப் போக்கி, அவருக்கு வேண்டிய உதவிகள் செய்தார். கொஞ்ச நாட்களில் கடல் கரை புரண்டு வந்து அந்த நகரை அழிக்க ஆரம் பித்தது. ஔவையார் அக் கொல்லருடைய வீடும் உலையும் அழியா திருக்கப் பாடினார். அப்படியே அவ்விரண்டும் அழியாமல் தப்பின.

இப்படியே அநேக அரும்பெரும் காரியங்களை ஔவையார் இவ் வுலகத்தில் செய்து புகழ் பெற்றார். பெண் கல்வி நம் தமிழ் நாட்டில் சிறப்புற்றிருந்ததற்கு இது ஒரு அத்தாட்சியாகும். ஔவையார் ஆத்தி சூடி, கொன்றைவேந்தன் முதலிய பல அரிய நூல்களும் செய்துள்ளார்.

### பயிற்சியும் கேள்வியும்

I (1) ஒரே அர்த்தமுள்ள வார்த்தைகளை எடுத்து எழுது. (2) பின்வரும் வார்த்தைகளைப் பிரித்தெழுது :—ஓரிடத்தில், நாடெங்கும், உயிரோடிருந்த, நெடுங் காலம், இன்னொரு. (3) பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் அமை :—சகி, வார், பாடு, நீங்கு, புகழ்.

II (2) ஔவையாரின் கலியாணம் என் நின்றது? (2) ஔவையார் நெடுங் காலம் உயிரோடிருந்ததற்குக் காரணம் என்ன? (3) ஔவையார் செய்த சில அரும் காரியங்கள் எவை?

III (1) பின்வரும் வார்த்தைகளுக்கு எதிர்ப்பதம் கூறு:—வா, நீளம், துன்பம், பகல். (உ-ம். பெரிது × சிறிது) (2) இந்தப் பாடத்திலுள்ள விஷயத்தை அறிய இரண்டு மூன்று கேள்விகள் கேள். (3) 'அரும் பெரும்' என்பது போன்று சேர்ந்து வரும் வார்த்தைகள் உனக்குத் தெரிந்தவற்றை எழுது. (4) மட மட, கட கட, என்று இந்தவிதமாகச் சேர்ந்துவரும் வார்த்தைகள் சிலவற்றை எழுது.

# 9. சோம்பேறிப் பையன்

( கும்மி )

சோம்பித் திரியேல் என்றெளவையார் சொல்லிய
சொல்லை மறந்த ஓர் சின்னப் பையன்
சோம்பித்திருந்து பள்ளிக்கூடம் போவதைச்
சுத்தமாய் மறந்து விட்டனனே. 1

நல்ல பிள்ளைகளின் சேர்க்கை யில்லாமலே
நாள்தோறும் சுற்றித் தெருத் தெருவாய்
மெல்ல மெல்ல கற்ற நல்ல வழக்கத்தை
விட்டு விட்டான் அவன் கெட்டு விட்டான். 2

தந்தையும் தாயாரும் சொல்லிய சொற்களைத்
தட்டி நடக்கவும் ஆரம்பித்தான்
எந்த விதம் சொல்லிப் பார்த்தாலும் மூளையில்
ஏருத சோம்பேறி யாகிவிட்டான். 3

பள்ளிக்கூடம் போகும் நேரம் வரையிலும்
பாயிற் படுத்துப் புரண்டொரு நாள்
அள்ளிப் போட்டுக் கொஞ்சம் சாப்பிட்டதும் விளை
யாடப் புறப்பட்டான் வேடிக்கையாய். 4

நாய் ஒன்றைக் கண்டதைக் கூப்பிடவே அது
நான் வரமாட்டேன் ஐயா என்றது
ஈ யொன்றைக் கண்டவன் கூப்பிடவே அது
எனக்கும் வேலை உண்டென்றதுவே. 5

சிற்றெறும் பொன்றினைக் கண்டவன் தன்னோடு
சேர்ந்து விளையாடக் கூப்பிட்டனன்
சிற்றெறும்பும் பையா நான் செய்யும் வேலைகள்
தீர்ந்ததும் பேசுவோம் என்றதுவே. 6

பூக்களில் புகுந்த தேனீயைக் கண்டவன்
பொழுதைப் போக்கிடக் கூப்பிடவே
ஊக்கம் இல்லாத ஓர் சோம்பேறியோடு நான்
ஒன்றுமே பேசிடேன் என்றதுவே. 7

"தேனியும் எறும்பும் நாயும் ஈயுமே
சேர்ந் தென்னுடன் விளையாடவில்லை
நானே மிகக் கெட்ட சோம்பேறி என்றிவை
நன்ருகப் புத்தி கற்பித்தனவே. 8

இன்று முதலாய் நான் தேனீயைப் போலவும்
எறும்பைப் போலவும் உழைத்திடுவேன்
நன்று நன்றென்னவே நல்லவர் வாழ்த்திட
நானும் உயர்வு பெறுவேனே" 9

என்று துணிந்தவன் வீடு திரும்பினன்
இன்பமுறக் கல்வி கற்க எண்ணி
அன்று முதலே நன்ருய் உழைத்ததால்
ஆனந்த வாழ்க்கை அடைந்தனனே. 10

—நா. கனகராஜ ஐயர்

## 10. பத்மினி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| போர் | குறித்த | கலைத்து | சம்மதம் | விளங்கினுன் | திரவியத்தை |
| அற்ற | சாயல் | வல்லவன் | யுத்தத்தில் | மாண்டான் | திகைத்தனர் |
| சிறை | வெறும் | முற்றுகை | தோழிகள் | மூடுபல்லக்கு | பிரயோசனம் |
| சினம் | தூக்கி | கோட்டை | யாதொரு | கண்ணுடியில் | புருஷர்களாய் |
| நிகர் | சேனை | வேடம் | ஏமாந்து | தவித்தார் | (ஒரு)தரம் |
| | | | ஒழிய | | |

வடக்கே **மீவார்** என்னும் நாட்டை ஆண்ட ரஜபுத்திர அரசர்களில் **பீம்சிங்** ஒருவன். அவனுடைய தலைநகர் **சித்தூர்**. அவன் மிகவும் வல்லவன். அவனுடைய புகழையும் கீர்த்தியையும் கேள்விப்பட்டு இலங்கை அரசன் அழகிற் சிறந்த தன் மகளாகிய **பத்மினியை**

அவனுக்குக் கலியாணம் செய்துகொடுத்தான். அவள் அழகிலும் அறிவிலும் நிகரற்றவளாய் விளங்கினுள்.

அச்சமயத்தில் டில்லியில் **அலாவுடீன்** என்ற முஸ்லீம் அரசர் ஆண்டு வந்தார். அவர் பத்மினியின் அழகைக் கேள்விப்பட்டார். அவளை யடைய எண்ணினுர். ஒரு பெரிய சேனையைத் திரட்டிக்கொண்டு சென்று சித்தூரை முற்றுகையிட்டார். முற்றுகையால் யாதொரு பிரயோசனமும் இல்லை என்று கண்டார். முற்றுகையை நிறுத்திவிட்டு பத்மினியை நேரில் ஒருதரம் பார்த்துவிட்டு டில்லிக்குத் திரும்பி விடுவதாகச் சொல்லி அனுப்பினுர். ரஜபுத்திரர் இதற்குச் சம்மதப்படவில்லை. "பத்மினியின் சாயலை ஒரு கண்ணுடியில்தான் பார்க்கலாம்" என்று சொல்லியனுப்பினர். அதன்படியே அலாவுடீன் பத்மினியின் சாயலைக் கண்ணுடியில் கண்டார். அவள் அழகில் மயங்கி ஆசை மிகக் கொண்டார். கோட்டைக்கு வெளியே தம்மை வழியனுப்ப வந்த பீம்சிங்கை அலாவுடீன் சிறைப்பிடித்து, தாம் தங்கியிருந்த கூடாரத்துக்குப் போய்ச் சேர்ந்தார்.

பத்மினியைத் தம்மிடம் அனுப்பினுலொழிய பீம்சிங்கை விடுவிக்க முடியாது என்று சொல்லி அனுப்பினுர். பத்மினியும், தான் தன்னுடைய தோழிகள் 600 பேருடன் மூடுபல்லக்குகளில் வருவதாகவும், வந்ததும் பீம்சிங்கை ஒருமுறை பார்த்துவிட்டு அலாவுடீனிடம் வருவதாகவும் பதில் கடிதம் எழுதியனுப்பினுள். அலாவுடீனும் அதற்குச் சம்மதித்தார். குறித்த நாளில் சித்தூரிலிருந்து 600 மூடுபல்லக்குகள் புறப்பட்டன. ஒவ்வொரு பல்லக்கையும் பல ஸ்திரீகள் தூக்கிச் சென்றனர். பல்லக்குகள் அலாவுடீன் தங்கியிருந்த இடம் வந்ததும், பீம்சிங் இருந்த கூடாரத்திற்கு ஒரு பல்லக்கு மட்டும் போயிற்று. அலாவுடீன் வெகுநேரம் காத்திருந்தும் பத்மினி தம்மிடம் வராதது கண்டு கோபங்கொண்டார். சில போர் வீரர்களை அனுப்பி பத்மினியைக் கொண்டு வரும்படி உத்தரவிட்டார். போன போர் வீரர்கள் பத்மினியையும் பீம்சிங்கையும் காணுமல் திகைத்தனர். பீம்சிங் குதிரையில் ஏறிச் சித்தூர்கோட்டைக்கு வந்து சேர்ந்தான். பத்மினி வேடம் போட்டவனும், பல்லக்குகளில் இருந்தவர்களும், பல்லக்குத் தூக்கி வந்தவர்

களும் தங்களுடைய பெண் வேடங்களைக் கலைத்து, வீர புருஷர்களாய் மாறினுர்கள். முஸ்லீம் போர் வீரர்களைக் காயப்படுத்தினுர்கள்.

இதுகண்ட அலாவுடீன் கடுங்கோபம் கொண்டார். பெருஞ் சேனையைத் திரட்டினுர். சினங்கொண்டெழுந்து சித்தூரை முற்றுகை யிட்டார். கடும்போர் விளைந்தது. முஸ்லீம்களின் பெருஞ் சேனையை ரஜபுத்திரர் எதிர்த்தார்கள். தங்களுடைய மானத்தைக் காப்பாற்ற அநேகர் தங்கள் உயிரை விட்டனர். பீம்சிங் யுத்தத்தில் மாண்டான். கடைசி ரஜபுத்திரன் இருக்கும் வரை சண்டை நடந்தது. பீம்சிங் இறந்தான் என்று பத்மினி கேள்விப்பட்டாள். பெருந் தீ வளர்த்தாள். அதில் அவளும் மற்ற ரஜபுத்திர ஸ்திரீகளும் விழுந்து மாண்டார்கள். ஜெயம்பெற்ற அலாவுடீன் பத்மினியைக்காணுது தவித்தார். தம்பெருஞ் சேனையையும் அதிகத் திரவியத்தையும் செலவுசெய்து எதற்காக முற்றுகையிட்டாரோ அதன் பலன் கிடைக்கவில்லை. ஏமாந்து வெறுங் கையோடு டில்லிக்குத் திரும்பினுர். என்னே! ஒரு பெண்மணியின் அறிவும் வீரமும்.

## பயிற்சியும் கேள்வியும்

I (1) பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் அமை :—கீர்த்தி, நிகரற்ற, சம்மதம், விடுவிக்க, திகைத்தனர், மானம். (2) கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை அமைத்து எழுது :—(ஸ) ஒரு சேனையைத் திரட்டிக் கொண்டு— சித்தூரை — யிட்டார். (ரி) அலாவுடீன் — நேரங்காத்திருந்தும் பத்மினி — வராதது கண்டு கோபங்கொண்டார்.

II (1) சேர்த்து எழுது :—பெரும் சேனை ; முற்றுகை இட்டார் ; உத்தரவு இட்டார். (2) திருத்தி எழுது :—(1) இரண்டு பையன் ஒருவரோடொருவர் சண்டை யிட்டனர். (2) அலாவுடீன் பத்மினியை ஒரு தடவை பார்த்துவிட்டு டில்லி போவ தாகச் சொன்னுர்.

III (1) அலாவுடீன் சித்தூரை முற்றுகையிடக் காரணம்என்ன ?
(2) பீம்சிங் சிறையினின்றும் எவ்வாறு விடுவிக்கப்பட்டான் ?
(3) பத்மினி எப்படி உயிர் துறந்தாள் ? காரணம் என்ன ?

# 11. முகம்மது நபி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நபி | தோல் | நாயகம் | வேதத்தை | வசப்படுத்தி | ஏற்றுக்கொண்டு |
| தீய | மகான் | சீமாட்டி | கொள்கை | தெய்வபக்தி | கைக்கொண்டு |
| குகை | லாபம் | அமைதி | அடிமை | சத்தியம் | தியானிப்பது |
| சுருள் | மணம் | கபடம் | சிஷ்யர் | கைதி | பெருக்கினுல் |
| கொலை | கருணை | விதவை | சாந்தம் | ஓலைகள் | கடந்து |

அரேபியா தேசத்தில் அகன்ற நில வெளியில் ஆங்காங்கே சில நகரங்கள் உண்டு. அவைகளில் மெக்கா ஒரு பெரிய நகரம். அங்கே அரேபியர் என்ற ஒரு ஜாதியார் இருந்தனர். அவர்களுள் மிகப் புகழ் பெற்ற ஒரு குடும்பத்தில் முகம்மது என்ற மகான் தோன்றினுர். இவர் தாயின் வயிற்றில் இருக்கும்போதே தகப்பனுர் இறந்து விட்டார். இவரது ஆரும் வயதில் தாயையும் இழந்தார். பிறகு இவர் இவரது பாட்டனுராலும், சிறிய தகப்பனுராலும் வளர்க்கப்பட்டார்.

முகம்மது இளமை வயதிலேயே அமைதி, சாந்தம், தெய்வ பக்தி, சத்தியம், கருணை முதலிய நற்குணங்கள் அடைந்திருந்தார்.

பதின்மூன்ரும் வயதில், இவருக்கு ஓர் பணக்கார விதவையிடம் வேலை கிடைத்தது. அச் சீமாட்டி பெருத்த வியாபாரம் செய்து வந்தாள். முகம்மதுவோ கள்ளங் கபடமற்ற மனத்துடன் காரியங்கள் செய்துவந்தார். வியாபாரத்தில் அதிக லாபம் கிடைத்தது. இவருடைய அருங்குணங்களைக் கண்ட அச் சீமாட்டி இவரையே மணம் செய்து கொண்டாள். முகம்மது தமக்குக் கிடைத்த செல்வப் பெருக்கினுல் கர்வம் கொள்ளாமல் அதுமுதல் கடவுளைக் கருத்தில் வைத்து வணங்கலானுர். இவர் சில சமயம் தனியாகப் பக்கத்திலுள்ள மலைக்குகை யொன்றிற்குச் சென்று கடவுளை தியானிப்பது வழக்கம். ஒரு நாள் கடவுள் அவர் முன் தோன்றி " நீ என்னைப்பற்றி ஜனங்களுக்குச் சொல்லும் நபி நாயகமாக விளங்குவாயாக " என்று சொல்லி மறைந்தார்.

அதிலிருந்து முகம்மது விக்கிரஹங்களை வணங்கக்கூடாதென்றும், கடவுள் ஒருவர்தான் உண்டென்றும், கடவுளுக்கு உருவமே கிடையாதென்றும், பொய், கொலை, களவு முதலியன கூடாவென்றும்

உபதேசித்தார். இதை முதலில் இவருடைய மனைவியும், மகனும், மருமகளும் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் மெக்காவிலுள்ள ஜனங்கள் இவருடைய புதுக் கொள்கைகளை ஆதரிக்கவில்லை. சிலர் இவரைக் கொல்லவும் நினைத்தார்கள். இதனையறிந்த முகம்மது மெடினா என்னும் நகரத்திற்குப் போனார். அங்குள்ள ஜனங்கள் இவரை ஏற்றுக்கொண்டு இவருடைய கொள்கைளையும் கைக்கொண்டார்கள். அவர்களுடைய உதவியால் ஒரு சேனை திரட்டித் தம்மை எதிர்த்த ஜனங்களை ஜெயித்தார். மெக்காவைத் தம் வசப்படுத்திக்கொண்டு தம் அரும் பெருங் குணங்களால் அவர்கள் தம் கொள்கையைக் கைக்கொள்ளும்படி செய்தார்.

இவருக்கு முதல் சிஷ்யராக ஆனவர் இவருடைய தோழராகிய அபு பகர் என்ற சீமான். இவர்தான் முகம்மது நபியின் அருள்வாக்குகளை பனை ஓலைகளிலும், தோல் சுருள்களிலும் எழுதி வைத்திருந்து பின்பு அவைகளைச் சேர்த்து அல் குர் ஆன் என்ற வேதத்தை எழுதினார். முகம்மது நபி, அரேபியா ஜனங்களின் தீய வழக்கங்களையும் அடிமை வியாபாரத்தையும் அறவே ஒழித்தார். தம்முடைய நற்குணங்களால் ஜனங்கள் தமது மார்க்கத்தைக் கைக்கொள்ளும்படி செய்தார். இவர் உண்டாக்கிய மதத்திற்கு இஸ்லாம் அல்லது முகம்மதிய மதம் என்று பெயர். இது இப்பொழுது உலகம் முழுவதும் பரவியிருக்கிறது.

### பயிற்சியும் கேள்வியும்

I (1) ஒரே அர்த்தத்தைக் குறிக்கும் சில வார்த்தைகள் இப்பாடத்திலிருந்து எழுது. (2) முகம்மது நபியின் சிறு பிராயத்தைப் பற்றி எழுது (3) மெக்கா ஜனங்கள் முகம்மது நபியின் கொள்கைகளை எப்படி ஒப்புக்கொண்டார்கள்? (4) இவருடைய முதல் சிஷ்யரைப் பற்றி தெரிந்ததை எழுது.

II (1) ராமா வா, (சகோதரர்களே) (2) பையன்களே வாருங்கள் (தம்பி) (3) நான் நேற்று வந்தேன் (நீ, நீர், நீங்கள், நாம், நாங்கள், அவன், அவள், அவர், அவர்கள்.) மேலே குறிப்பிட்டுள்ள வாக்கியங்களில் அவைகளுக்கு நேராயுள்ள வார்த்தைகளை அமைத்து அதற்குத் தகுந்த வாக்கியங்களை எழுது.

# 12. கயிறு திரித்தல்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| பிரி | சணல் | மட்டை | இழைகள் | முறுக்குண்டு | கொச்சக்கயிறு |
| திரி | சவுரி | கவர் | தேவை | சுத்தியால் | வடக்கயிறு |
| நார் | உரித்த | பருமன் | குஞ்சம் | | |

கயிறு திரித்தல் மிகவும் எளிதான ஒரு கைத்தொழில். இதை எங்கும் யாரும் செய்யலாம். இதற்கு அதிகமான முன் பணம் தேவையில்லை. கயிறுகளில் நூல் கயிறு, பனை நார்க் கயிறு, தென்னஞ் சவுரிக் கயிறு அல்லது கொச்சக் கயிறு, சணல் கயிறு முதலிய பல வகைகள் உண்டு.

நூல் கயிறு திரிப்பது மிகவும் எளிது. முதலாவதாக நூலில் இரண்டு அல்லது மூன்று இழைகளைச் சேர்த்து நம் கைக்கு வசமான புறமாய் திரிக்க வேண்டும். இவ்வாறு திரித்ததற்குப் பிரி என்று பெயர். பிறகு இரண்டு அல்லது மூன்று பிரிகளைச் சேர்த்து முன் திரித்ததற்கு எதிர்ப் பக்கமாய்த் திரிக்கவேண்டும். இப்போது பிரிகள் ஒன்றோடொன்று முறுக்குண்டு கயிறாகும். முறுக்குகள் சரியாய் படியும் வரை கயிற்றைச் சுற்றி வைக்கவேண்டும்.

**கொச்சக் கயிறு** :—இது தேங்காயின் மேலுள்ள மட்டையிலிருந்து கிடைக்கும் சவுரியால் செய்யப்படுகிறது. தேங்காயை உரித்த பின், அதன் மட்டையைத் தண்ணீரில் ஊற வைப்பார்கள். நன்றாக ஊறிய பின் அதை ஒரு கல்லின் மேல் வைத்து, சுத்தியால் அடிப்பார்கள். அடித்த பின் மிருதுவான சவுரி கிடைக்கும். இதைச் சிக்கல் எடுத்து குஞ்சம் குஞ்சமாய்க் கட்டிக் காய வைப்பார்கள். பிறகு ஒரே பருமனுள்ள பிரி திரிப்பார்கள்.

பிரிகளை இரு பக்கமும் கவருள்ள ஒரு பலகையில் சுற்றி மொத்தமாய் வைத்துக்கொண்டு, வேண்டிய நீளத்தில், இரண்டு மூன்று அல்லது ஐந்து பிரிகளில் கயிறுகள் திரிக்கலாம். கொச்சக்கயிறு, பாரக்கயிறு, வடக் கயிறு முதலியவைகள் தென்னஞ் சவுரியிலிருந்தே செய்யப்படுகின்றன. இந்த மாதிரியே பனை நார்க் கயிறுகளும் சணல் கயிறுகளும் திரிக்கப்படுகின்றன.



### பயிற்சியும் கேள்வியும்

I (1) பலவிதமான கயிறுகளைப்பற்றி எழுது. (2) கொச்சக் கயிறு எப்படி நமக்குக் கிடைக்கிறது?

II இப்பாடத்திலுள்ள இரு அர்த்தங்கொண்ட பதங்களை எழுது.

## 13. சிபிச் சக்கரவர்த்தி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தராசு | நிமிஷம் | தோன்றி | உத்தமன் | சம்பாதித்து | நடுநடுங்கிய |
| தசை | பிச்சை | பதிலாக | புகுந்தது | பரிசோதிக்க | அடைக்கலம் |
| எடை | துரத்தி | வரங்கள் | நீதிமுறை | காட்டுக்கு | அண்டினவரை |
| | | | களைத்து | | |

முன்னொருகாலத்தில் **சிபி** என்னும் ஓர் சக்கரவர்த்தி இருந்தான். அவன் மிகவும் நற்குணம் வாய்ந்த உத்தமன். நீதி முறை தவறாது அரசாண்டு வந்தான். பிச்சை கேட்பவருக்கு இல்லை என்னாது கொடுப்பவன். அண்டினவரை ஆதரிப்பவன்.

ஒருநாள் சிபிச் சக்கரவர்த்தி வேட்டையாடக் காட்டுக்குச் சென்றான். அங்கு வேட்டையாடிக் களைத்து ஒரு இடத்தில் உட்கார்ந்து இருந்தான். அப்பொழுது மிகவும் பயந்து நடுநடுங்கிய ஒரு புறா அவன் மடியில் வந்து அடைக்கலம் புகுந்தது. பின்னால் அதைத் துரத்திக்கொண்டு ஒரு பருந்து வந்தது. மடியில் விழுந்த புறாவைச் சிபி மறைத்துக்கொண்டான். அதைப் பார்த்து பருந்து அரசனை நோக்கி, "அரசனே! உன் மடியிலிருக்கும் புறா என்னைச் சேர்ந்தது. நான் பிடித்தபின் தப்பி, உன்னிடம் ஓடிவந்துவிட்டது. ஆகையால் அதை என்னிடம் ஒப்புவிக்கவேண்டும்" என்றது.

அதுகேட்ட சிபி, "ஏ! பருந்தே! என்னிடம் அடைக்கலம் புகுந்த புறாவை நான் ஒருக்காலும் விடேன். ஆனால் அதற்குப் பதிலாக நீ எது கேட்டாலும் தருகிறேன்; கேள்" என்றான். அதற்குப் பருந்து "அரசனே! எனக்கு இப்போது வேண்டியது ஆகாரமே. ஆகையால் அப்புறாவின் எடையுள்ள உனது சதையைக் கொடுத்தாலும் போதும்" என்றது. சிபி உடனே அதற்குச் சம்மதித்து ஒரு தராசின் ஒரு தட்டில் புறாவை வைத்து, மறுதட்டில் தன் சதையை அறுத்துவைக்க ஆரம்

பித்தான். முதலில் கொஞ்சம் கொஞ்சமாய் சதையைத் தட்டில் வைத்தான். அப்பொழுது புரு இருந்த தட்டு மேலே ஏறவே இல்லே. உடனே சிபி, முன்பின் யோசியாமல், தானே மறு தட்டில் ஏறினன். இரண்டு தட்டுக்களும் சமமாயின.

ஆனல் மறு நிமிஷமே புருவையும் பருந்தையும் காணவில்லே. அவன் எதிரே இந்திரன், அக்னி ஆகிய இரண்டு தேவர்களும் தோன்றி, "அரசனே! உன்னுடைய மனதைப் பரிசோதிக்கவே நாங்கள் இருவரும் புருவும் பருந்துமாய் வேடங்கொண்டு வந்தோம். நீ உன் தேகத்தையே கொடுத்து என்றும் அழியாத புகழைச் சம்பாதித்துக்கொண்டாய். நீ சுகமாய் வெகுகாலம் வாழ்வாயாக" என்று கூறி அவனுக்குப் பல வரங்கள் தந்து மறைந்தனர்.

ஆகையால் பிள்ளேகளே! நீங்களும் பிராணிகளிடத்தில் எப்பொழுதும் தயையுள்ளவர்களாக இருக்கவேண்டும்.

### பயிற்சியும் கேள்வியும்

I (1) பின்வரும் வார்த்தைகளே வாக்கியங்களில் அமை:—துரத்தி, ஒப்புவி, ஆரம்பி, சமம், புகழ். (2) இப்பாடத்தில் வரும் இரண்டு அர்த்தமுள்ள வார்த்தைகளே எழுது.

II (1) பின்வரும் வாக்கியங்களில் நான் என்பதற்குப் பதிலாக நீ, அவன் என்ற வார்த்தைகளே உபயோகப்படுத்தி எழுதவும். (ஸ) நான் நேற்று வந்தேன். (ரி) இப்பொழுது நான் வருகிறேன். (க) நாளே நான் வருவேன். (2) இந்திரனும் அக்னியும் யாரைப் பரிசோதித்தார்கள்? எப்படி?

## 14. உப்பு

சத்து குவியல் பழமொழி பதார்த்தம் தொட்டிகள் சக்தியை
மூலம் சரிவுகள் காய்ச்சி முக்கியமாய் சுரங்கங்கள் உப்பளங்கள்
ஆழம்

நமது ஆகாரத்தில் மிகவும் முக்கியமாய் இருப்பது உப்பு. அது நமக்கு அவசியமான பதார்த்தம். உப்பு இல்லாத எந்தப் பதார்த்தமும் ருசியாய் இராது. அதிக நாள் கெடாமல் இருக்க வேண்டிய பதார்த்தங்களுக்குஉப்பை அவசியமாய்ச் சேர்க்கிருர்கள். இதனுலேயே **'உப்பில்லாப்**

**பண்டம் குப்பையிலே'** என்ற பழமொழி வழங்கி வருகிறது. உப்பு வெண்மை நிறமுள்ள ஒரு கடின பதார்த்தம். அது தண்ணீரில் கரையக் கூடியது. இதனுல்தான் நாம் உப்பை ஆகாரங்களில் சேர்க்க முடிகிறது. உப்பு எடுக்கும் விதங்கள் மூன்று.

முதலாவது கடல் நீரிலிருந்து உப்பு எடுக்கப்படுகிறது. மழை ஜலம் ஆறுகள் மூலமாகவும் ஓடைகள் மூலமாகவும் கடலில் போய் விழுகிறது. இவ்வாறு அவைகள் வரும் வழியில் தரையிலுள்ள உப்புப் பதார்த்தங்களைக் கரைத்துக்கொண்டு போய்க் கடலில் சேர்க்கின்றன. கடலில் உள்ள நீர் வெளியே போவதில்லை. ஆனுல் கடல் நீர் சூரிய வெப்பத்தினுல் ஆவியாக மாறி, அதிலுள்ள நல்ல தண்ணீர் எடுபடுகிறது. தவிரவும் அடிக்கடி கடலில் வந்து சேருகிற உப்பு அங்கேயே தங்குகிறது. இக்காரணங்களினுலேயே கடல் நீரின் உப்புச் சத்து அதிகமாகிக் கொண்டே இருக்கிறது.

கடல் நீரைச் சிறு வாய்க்கால்கள் மூலம் உப்பு செய்யும் இடத்திற்குக் கொண்டுபோவார்கள். உப்பு செய்யப்படும் இடம், ஆழமில்லாத சிறு பாத்திகளாகப் பிரிக்கப்பட்டிருக்கும். வாய்க்கால்கள் வழியாக வரும் கடல் நீரை, சிறிது சிறிதாக இப்பாத்திகளில் நிரப்புவார்கள். பாத்திகளில் தங்கும் நீரெல்லாம், சூரிய வெப்பத்தினுல் சில நாட்களில் ஆவியாக மாறிப் போய்விடும். அதிலுள்ள உப்பெல்லாம், சிறு கற்களாகப் பாத்திகளிலேயே தங்கிவிடும். இவ்வுப்பை எடுத்து ஒன்ருய்ச் சேர்ப்பார்கள். சில நாட்கள் சென்றதும் அவைகளைக் குவியலாகக் குவித்து வியாபாரிகளுக்கு விற்பார்கள். இவ்வாறு உப்பு செய்யும் இடங்களுக்கு **உப்பளங்கள்** என்று பெயர்.

நமது சென்னை ராஜதானியில் கடற்கரை ஓரமாக அநேக உப்பளங்கள் இருக்கின்றன. எல்லா உப்பளங்களும் நமது அரசாங்கத்தார் வசமே இருக்கின்றன. இதற்காகவே பல உத்தியோகஸ்தர்கள் இருக்கின்றனர். அவர்களுக்கு **உப்பு இலாகா உத்தியோகஸ்தர்கள்** என்று பெயர். வியாபாரிகள் அரசாங்கத்தாரிடமிருந்து மொத்தமாக உப்பை வாங்கி நமக்கு விற்கிருர்கள்.

இரண்டாவது நிலத்திலிருந்தும், மலையிலிருந்தும் உப்பு எடுக்கப்படுகிறது. பூமியில் பெரிய சுரங்கங்கள் வெட்டி, உப்பு எடுக்கிறார்கள். மலைகளிலுள்ள பிளவுகளிலும், மலைச்சரிவுகளிலும் உப்பு கிடைக்கும். ஆனால் இவ்வுப்பு மண்ணோடும் வேறு பதார்த்தங்களோடும் கலந்திருக்கும். ஆகையால் உப்பைத் தனியாய்ப் பிரித்துச் சுத்தம் செய்யவேண்டும். இம்மாதிரி உப்புச் சுரங்கங்கள் ஐரோப்பா தேசத்தில் அநேகம் இருக்கின்றன.

மூன்றாவது, கிணறுகளிலும் ஊற்றுக்களிலும் உள்ள உப்பு நீரைக் காய்ச்சி உப்பு எடுக்கிறார்கள். இந்த உப்பு நீரைப் பெரிய தொட்டிகளில் ஊற்றி, அடுப்பில் வைத்துக் காய்ச்சுவார்கள். இப்படி எடுக்கப்படும் உப்பு மிகவும் சுத்தமானது.

நமது ஆகாரத்தில் உப்பைச் சேர்ப்பதால், தேகத்திலுள்ள எலும்புகள் பலப்படுகின்றன. உப்பு ஜீரணசக்தியை அதிகப்படுத்தும். ஒட்டகம் உப்பு அதிகமாய் தின்பதால், பலமுள்ளதாய் இருக்கிறது. ஒவ்வொரு பதார்த்தத்திலும் உப்பு இருக்கிறது. உப்பு இல்லாவிட்டால் ஒரு உணவுக்கும் ருசியில்லை. உப்பு இல்லாவிட்டால் உயிர் இல்லை. உப்பு அளித்தவன் உயிர் கொடுத்தவன். இதனால்தான் '**உப்பிட்டவரை உள்ளளவும் நினை**' என்ற பழமொழி வழங்குகிறது.

### பயிற்சியும் கேள்வியும்

I (1) இப்பாடத்திலே காணப்படும் பழமொழிகளை எடுத்தெழுது. (2) இப்பாடத்திலுள்ள பெயர்ச்சொற்களை எடுத்தெழுதி, அவைகளுக்கு ஒருமை, பன்மை கூறு.

II (1) இப்பாடத்திலுள்ள மூன்றாவது பாராவைச் சுருக்கி எழுது. (2) உப்புக்கள், கடல் உப்பளம் இவைகளைப் பற்றிக் குறிப்பு எழுதுக. (3) பின் வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் அமை:—முக்கியமாய்; காய்ச்சி; மூலமாக; வெப்பத்தினால்; சரிவுகள்; ஜீரண சக்தி; இலாகா.

# 15. பாரதியார்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அடக்குமுறை | அச்சிட்டு | பத்திரிகை | சுதந்திர | தேசீய | தீரம் |
| வாய்ப்பட்டு | கவியாய் | கேலியாக | தாமதம் | சுயகவி | ஹிந்தி |
| முன்னேற்றம் | பிராயத்தில் | கோடியில் | மதித்து | மிதித்து | நோய் |
| சம்ஸ்கிருதம் | சமஸ்தான | கல்லூரியில் | பொழிவார் | ஊக்கம் | சுமார் |
| தாலூகாவில் | அருமையாய் | கழித்தார் | புதல்வர் | பத்தினி | மனைவி |
| விளாங்காய் | இறந்தார் | பெய்யுமா | தேர்ச்சி | பரிக்ஷை | இளைய |

தென்னிந்தியாவில் தென் கோடியிலிருப்பது திருநெல்வேலி ஜில்லா. அதில் கோவில்பட்டி என்ற தாலூகாவில் எட்டயபுரம் என்ற ஒரு ஜமீன் இருக்கிறது. அதிலே சுமார் ஐம்பது அறுபது வருஷங்களுக்கு முன்னே சின்னச்சாமி ஐயர் தம் மனைவியாகிய லக்ஷ்மி அம்மாளுடன் சுகமாய் வாழ்ந்து வந்தார். இவர்களுக்கு 1882-ம் வருஷம் ஒரு புதல்வர் தோன்றினார். அந்தக் குழந்தைக்கு சுப்பிரமணியன் என்று பெயரிட்டு அருமையாய் வளர்த்து வந்தனர். இவருடைய ஐந்தாவது பிராயத்தில் இவருடைய தாயார் இறந்தார்.



இவர் தமது ஐந்தாவது வயதில் பள்ளிக்கூடம் சென்றார். படிப்பில் நல்ல ஊக்கம் காட்டினார். இவரது ஏழாவது வயதில் இவரே சொந்தமாய்ச் சிறு பாட்டுக்கள் பாடும் நிலைமையை அடைந்தார். தமது பதினோராவது வயதில் சுய கவிகள் பாட ஆரம்பித்தார். இந்தச் சமயத்தில்தான் இவருடைய கவித்திறமையை அறிந்த புலவர்கள் இவரை **பாரதி** என்று அழைத்தனர். இதிலிருந்து இவருக்கு **பாரதியார்** என்ற பெயரே வழங்கலாயிற்று.

இவர் திருநெல்வேலியில் ஹிந்துக்கள் கல்லூரியில் சிறிது காலம் வாசித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது பாரதியார் கவிகள்

சரமாரியாகப் பொழிவார் என்று எல்லோரும் பேசிக்கொள்வார்கள். கவியில் காளமேகம் என்பார்கள் இவரை. ஒரு நாள் இவருக்குப் பாடம் தெரியவில்லை. உபாத்தியாயர் கோபங்கொண்டு "மேகம் பொழி யட்டுமே" என்று கேலியாகச் சொன்னார். பாரதியார் உடனே தாமத மின்றி, "ஐயா! மேகம் அதன் இஷ்டப்பட்ட நேரத்தில் மழைபொழி யுமே தவிர, தாங்கள் இஷ்டப்பட்ட நேரத்தில் பெய்யுமா? இது தங்க ளுக்குத் தெரியாதா?" என்று பதில் சொன்னார்.

கொஞ்சநாளைக்குப் பிறகு இவருடைய தகப்பனார் இறந்து விட்டார். ஆகையால் இவர் ஐந்தாவது பாரத்திற்குமேல் படிக்க முடியாமல் போய்விட்டது. இவருடைய தகப்பனாரின் சகோதரி காசியில் இருந்தார். அந்த அம்மாள் இவரை வரவழைத்து அங்கே படிக்க வைத்தார். அங்கு இவர் ஹிந்தி, சம்ஸ்கிருதம் முதலிய பாஷைகள் படித்தார். முதல் பரிக்ஷையில் முதலாவதாய்த் தேர்ச்சி பெற்றார். அப்பொழுது இவருக்குக் கலியாணம் ஆகியிருந்தது.

இவருக்கு இருபது வயதாகும்போதுதான், இவர் பிறந்த இடத் திற்குத் திரும்பி வந்தார். அங்கே ஜமீன்தாரிடம் சமஸ்தான கவியா யிருந்தார். இவர் சுதந்திர வாழ்வில் பிரியமுள்ளவர். ஆகையால் அவ் விடம் விட்டு மதுரையில் சில மாதம் உபாத்தியாயரா யிருந்தார். சில காலம் **இந்தியா, பாலபாரதம்** என்ற பத்திரிகைகள் நடத்தினார். இதில் சுதந்திரத்தைப் பற்றி வீர தீரமாய் எழுதினார். அடக்குமுறை ஆரம்பித்தது. தம் குடும்பத்துடன் பிரெஞ்சுக்காரருக்குச் சொந்த மான **புதுச்சேரி**க்குச் சென்று அங்கு பத்து வருஷம் காலங்கழித்தார். பின்பு சென்னையில் **சுதேசமித்திரன்** என்ற பத்திரிகைக்கு உதவி ஆசிரியராய் வேலை பார்த்து வந்தார்.

ஒரு தடவை யானை ஒன்றுக்கு விளாங்காய் கொடுக்கப் போனார். அது மதம் கொண்டிருந்தபடியால் இவரைக் காலால் மிதித்துவிட்டது. அதிலிருந்து நோய்வாய்ப்பட்டு 1921-ம் வருஷம் செப்டம்பர் மாதம் இறந்தார்.

இவர் அநேக தேசியப் பாட்டுக்கள் பாடியிருக்கிறார். அவைகளை எல்லாம் சேர்த்துப் பெரிய புத்தகங்களாக அச்சிட்டிருக்கிறார்கள்.

இவருக்கு இரண்டு பெண் பிள்ளைகள் மட்டும் உண்டு. அவர்களில் இளைய மகளுக்காகப் பாடிய பாட்டுத்தான் பாப்பா பாட்டு. சுப்பிரமணிய பாரதியாரை நாம் நன்கு மதித்து அவரைப்போல் தமிழில் முன்னேற்ற மடைவோமாக.

### பயிற்சியும் கேள்வியும்

I (1) கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை அமை:—இவரது— வயதில் பள்ளிக்கூடம் போனார். படிப்பில்——ஊக்கம் காட்டினார். இவரது ஏழா வது வயதில்——சொந்தமாய் பாட்டுக்கள் பாடும் நிலையை அடைந்தார். (2) இப் பாடத்தில் வரும் இனமுறை ஜாப்தா எழுது.

II (1) பாரதியார் திருநெல்வேலியில் படித்த காலத்தில் நடந்த சம்பவம் ஒன்றை எழுது. (2) அவருடைய இறுதிக்காலம் எப்படி ஏற்பட்டது? (3) பாரதியார் வேலை பார்த்ததைப் பற்றி சுருக்கி எழுது. (4) பின்வரும் வாக்கியத்தை பல சிறு வாக்கியங்களாக எழுது:— இவருக்கு இருபது பிராயம் இருக்கும்போது தாம் பிறந்த இடத்திற்கு திரும்பி வந்து அங்குள்ள ஜமின்தாரிடம் சம்ஸ்தான கவியாய் இருந்து வந்தார்.

## 16. ஏரி


| | | | | |
|---|---|---|---|---|
| பாசி | ஜீவராசிகள் | வண்டல் | தன்னூத்து | கட்டாயமாக |
| நச்சு | வியாதி | பொய்கை | அடர்ந்தும் | கால்வரத்து |
| மடை | பாங்கு | வற்றுவது | ஏராளமாய் | விசேஷமாய் |
| தேக்கி | கெடுதி | வானமாரி | அடிவாரம் | |

ஏரி என்பது குளம் என்று சாதாரணமாகச் சொல்லப்படுகிறது. ஒவ்வொரு ஊரிலும் அல்லது கிராமத்திலும் ஒன்று அல்லது இரண்டு குளங்கள் கட்டாயமாக இருக்கும். குளங்கள் **வானமாரிக் குளம், கால்வரத்துக் குளம், தன்னூத்து குளம்** என மூன்று வகைப்படும். ஒவ்வொரு ஊரிலும் குளங்கள் இருப்பது ஜனங்களுக்கும் ஆடுமாடு முதலிய பிராணி களுக்கும் மிகுந்த உபயோகமாய் இருக்கும்.

வானமாரிக் குளம் என்பது மழைத் தண்ணீரைத் தேக்கி வைக்கும் குளம். இதில் மழை காலத்தில் தண்ணீர் அதிகமாய் இருக் கும். இதிலிருந்து மடைமூலமாய் வயல்களுக்குத் தண்ணீர் பாய்ச்சு

வார்கள். இத்தண்ணீர் மனிதர்கள் குடிப்பதற்கோ அல்லது குளிப்பதற்கோ பிரயோசனப்படாது. இதில் தரையிலுள்ள அழுக்கு, அசுத்தங்கள் சேர்ந்திருப்பதால் பயிர் வகைகளுக்கு மட்டும் நல்லது. இது ஆடுமாடுகள் குளிப்பாட்டுவதற்கும் உபயோகப்படும்.

மணற்பாங்கு அல்லது கல்தரையான இடங்களிலுள்ள வானமாரிக் குளங்களில் ஆடுமாடுகளைக் குளிப்பாட்டாமலும், மனிதர்கள் துணிமணிகளைத் துவைக்காமலும், அதன் பக்கங்களில் அசுத்தம் செய்யாமலும் வைத்திருந்தால், அதன் தண்ணீரைக் குடிக்கவும்



ஏரியின் ஒருவிதத் தோற்றம்

சமையல் முதலியவைகள் செய்யவும் உபயோகப்படுத்திக் கொள்ளலாம். அசுத்தத்தினுல் தண்ணீர் கெட்டுப்போகுமானுல், அத்தண்ணீரை உபயோகிப்பவர்களுக்குப் பலவித வியாதிகள் உண்டாகும்.

கால்வரத்துக் குளம் ஆறுகளிலிருந்தும் வாய்க்கால்களிலிருந்தும் எக்காலத்திலும் தண்ணீரைத் தேக்கி வைக்க உதவுகிறது. இது நன்செய்களுக்குத் தண்ணீர் பாய்ச்சவும், ஆடுமாடுகள் தண்ணீர் குடிக்கவும் உதவுகிறது. தண்ணீர் ஒரு பக்கத்திலிருந்து வந்துகொண்டும், இன்னொரு பக்கத்தில் மடை வழியாய் வயல்களுக்குப் பாய்ந்துகொண்டும் இருக்கிறபடியால், அடிக்கடி அது சுத்தப்படுகிறது. ஓடிக்கொண்டிருப்பதால் தண்ணீரிலுள்ள அசுத்தங்கள் நீங்கி, அத்தண்ணீர் சுத்தமாகும். கால்வரத்துக் குளங்களில் மீன்கள் ஏராளமாய் வந்து சேர்வதினுலும் தண்ணீர் சுத்தமடைகிறது. இக்குளங்களைக் காவல் செய்து சுத்தமாய் வைத்துக்கொள்வது எல்லா வகைகளிலும் மேலானது.

தன்னாத்துக் குளங்கள் விசேஷமாய் மலை அடிவாரங்களிலும், உயர்ந்த மலைகளின் மேலும் காணப்படுகின்றன. இக்குளங்களில் எக்காலத்திலும் தண்ணீர் வற்றுவதில்லை. இத்தண்ணீருக்கு ஓட்டம் இருக்கும்படியாகச் செய்தால் எவ்வகைத் தண்ணீரிலும் மேலானதாகக் கொள்ளலாம். ஆனால் பக்கங்களில் மரஞ் செடிகள் அடர்ந்தும், இலை கொடிகள் தண்ணீரில் விழுந்தும் சரியான நீரோட்டம் இல்லாமலும் இருந்தால் இதுவே நச்சுப் பொய்கையாகும். இது மனிதருக்கு எவ்விதத்திலும் கெடுதியையே விளைவிக்கும்.

பொதுவாக குளங்கள் விவசாயத்திற்கே மிகுந்த பிரயோசனத்தை அளிக்கின்றன. தவிரவும் எல்லா ஜீவராசிகளுக்கும் தண்ணீர் குடிக்க உதவுகின்றன. சில குளங்களில் ஒருவகைப் பாசி உண்டாகிறது. இப்பாசி, நிலங்களுக்கு நல்ல உரமாகும். தண்ணீர் அடித்துக்கொண்டு வரும் வண்டல்களும் குளங்களின் அடியில் தங்குவதினால், அடி மண்ணை எடுத்து, தோட்டங்களுக்கும் நிலங்களுக்கும் உரமாகப் போடுகிறார்கள். குளங்கள் அல்லது ஏரிகளால் நமக்கு மிகுந்த நன்மைகள் ஏற்படுகின்றன.

## பயிற்சியும் கேள்வியும்

I (1) பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் அமை :—அடிவாரம்; துவைக்காமல்; விசேஷமாய்; அழுக்கு; கட்டாயமாக; வண்டல்; வற்றுவது; ஏராளமாய். (2) கோடிட்ட இடங்களில் வார்த்தைகள் அமை :—மணற்பாங்கு—— கல் தரையான இடங்களிலுள்ள——குளங்களில் ஆடுமாடுகளைக் குளிப்பாட்டாமலும் மனிதர்கள் துணிமணிகளைத் துவைக்காமலும் அதன் பக்கங்களில்——செய்யாமலும் வைத்திருந்தால்——தண்ணீரைக் குடிக்கவும் சமையல் முதலியவை செய்யவும்—— படுத்திக் கொள்ளலாம். (3) (ஸ) உன் பெயர் என்ன? (ரி) உன் தகப்பனாருக்கு என்ன வேலை? (க) உன் பள்ளிக்கூடத்தில் எத்தனை பிள்ளைகள் படிக்கிறார்கள்? (ம) ஆண்கள் எத்தனை? (ப) பெண்கள் எத்தனை? (த) உன் பள்ளிக்கூடத்தில் எத்தனை வகுப்புகள் இருக்கின்றன? (நி) உனக்கு என்ன கைத்தொழில் தெரியும்?

II (1) ஏரிகள் எத்தனை வகைப்படும்? அவை யாவை? (2) ஏரிகளால் என்ன பிரயோசனம்? (3) மலைகளிலும் மலை அடிவாரங்களிலுமுள்ள குளங்களை எப்படிச் சுத்தமாய் வைத்துக்கொள்ள வேண்டும்?

## 17. கொசு

(தெம்மாங்கு மெட்டு)

பல்லவி

பொல்லாத கொசுவே—இங்கே
நில்லாதே கொசுவே
எல்லோரும் உன்னையே—கண்டால்
கொல்வோமே கொசுவே (பொ)

சரணங்கள்

1. குட்டை குளங்களிலும் கட்டுக் கடைத் தண்ணீரிலும்
முட்டையிட்டுக் குஞ்சாகி மோசம் செய்ய வந்திடுவாய் (பொ)

2. மாடிமேல் ஏறி நாங்கள் மகிழ்வுடனே உறங்கும்போது
ஓடிவந்து ஊசிகுத்தி உபத்திரவம் பண்ணுகிறாய் (பொ)

3. மா நிலத்தில் மக்கட்கெல்லாம் **மலேரியாக்** காய்ச்சல் தந்து
மானிடரின் ரத்தமதை மண்டியிட்டுக் குடித்திடுவாய் (பொ)

4. குட்டை குளங்களையும் கட்டுக்கடைத் தண்ணீரையும்
திட்டமாக மூடி உன்னால் தீங்கு வராமல் தடுப்போம் (பொ)

5. இல்லாமற் செய்திடவே எல்லோருமே முயல்வோம்
பொல்லாத மருந்தால் உன்னைப் போக்கிடுவோம் ஓடு ஓடு (பொ)


6. ஆய்ந்தறிந்த **கோயினாவினை** அடிக்கடி நாம் அருந்திமுறைக்
காய்ச்சல் தனைத் தடுப்போம் கண்டு நீயும் ஓடிடுவாய். (பொ)

**வி. சூ. நடராஜன்.**

# 18. மகாத்மா காந்தி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| தாழ்த்தப்பட்டவர் | ஆடம்பரம் | அஹிம்சை | மகாத்மா | தலைவர் | வைசிய |
| கொண்டாடுகிறுர் | ஆயுதங்கள் | கட்சியார் | முறையில் | விலக்கு | உறுதி |
| கணவருடைய | கீழ்ப்படிதல் | பட்டம் | காரணமாக | இளமை | |
| பெரும்பாலோர் | மதுபானம் | அவமதிக்க | தவம் | சபை | |
| பொருட்படுத்த | போற்றுகிறது | விடாமுயற்சி | காங்கிரஸ் | திவான் | |

மகாத்மா காந்தி பெயரை அறியாதவர் ஒருவரும் நம் இந்தியாவில் இரார். இப்போதைய உலகில் மிகவும் சிறந்தவர் என்று உலகம் முழுவதும் இவரைப் போற்றுகிறது. அமெரிக்கப் பெரியார் ஒருவர் இவரை இரண்டாவது கிறிஸ்து நாதர் என்று கொண்டாடுகிறுர். இந்தியர் யாவரும் இவர் பாரத நாட்டுத் தவப்புதல்வர் என்று போற்றுகின்றனர். அஹிம்சையினுலும் அன்பினுலுமே இவ்வுலகில் எக்காரியத்தையும் செய்து முடிக்கலாம் என்னும் உண்மையைச் செய்கையில் காட்டி வந்தார்.



இவரது முழுப்பெயர் **கரம்சந்திர மோகன்தாஸ் காந்தி.** இவர் இந்தியாவின் மேற்கேயுள்ள **குஜராத்தில்** பனியா என்னும் வைசிய வகுப்பிற் பிறந்தார். இவருடைய தகப்பனுரும் பாட்டனுரும் **ராஜகோட்** அரசருக்கு திவான்களாக இருந்தனர். இவர் சிறு வயதிலேயே கீழ்ப்

படிதல், விடாமுயற்சி, மன உறுதி முதலிய நற்குணங்கள் நிறைந்தவராயிருந்தார். நன்ருய்ப் படித்துப் பரிட்சையில் தேறினர். இங்கிலாந்துக்குச் சென்று பாரிஸ்டர் பரிட்சையில் தேறப் பிரியங்கொண்டார். இங்கிலாந்தில் மாமிசம் உண்பதில்லை யென்றும் மதுபானம் செய்வதில்லையென்றும் தம் தாயிடம் உறுதிமொழி கொடுத்தார். இந்த வாக்குறுதியை, இவர் இங்கிலாந்தில் படிக்கும் காலத்தில், மிகுந்த கஷ்டத்துடன் காப்பாற்றினர். கடைசியில் பரிட்சையில் தேறி பாரிஸ்டர் பட்டம் பெற்று, இந்தியாவுக்குத் திரும்பினர்.

இவருக்கு இளமையிலேயே கலியாணம் ஆகியிருந்தது. இவரது மனைவியார் பெயர் **கஸ்தூரிபாய்** அம்மாள். இவர் தமது கணவருடைய நோக்கப்படியே சிறிதும் தவருது நடந்து வந்தார். தேசீய விஷயங்களிலும் இவர் தம் கணவரோடு ஒத்துழைத்து வந்தார்.

மோகன்தாஸ் காந்தி இங்கிலாந்திலிருந்து திரும்பியதும், பாரிஸ்டராகச் சில காலம் வேலை பார்த்தார். அவ்வேலை இவருக்குப் பிடிக்கவில்லை. கொஞ்சகாலம் ஆசிரியராகவும் இருந்தார். இக் காலங்களில் இவர் கடவுள் பக்தியிலும், உண்மை பேசுவதிலும் சிறந்தவர் என்று பெயர் பெற்ருர். ஒரு சமயம் இவர் ஒரு வியவகார விஷயமாக **ஆப்ரிக்கா** செல்ல நேர்ந்தது. அங்குக் கூலியாட்களாக வேலைசெய்த இந்தியர்கள் கஷ்டப்படுவதையும், அந்நியர்களால் அவமதிக்கப்படுவதையும் கண்டார். மனவருத்தம் கொண்டார். இந்தியர்களுடைய நன்மைக்காக அந்நியர்களுடன் வாதாடினர். அதனல் இவருக்குப் பல கஷ்டங்களும் நஷ்டங்களும் ஏற்பட்டன. இவர் அவைகளைப் பொருட்படுத்தாமல் தாம் எடுத்துக்கொண்ட காரியத்திற்காகக் கடைசி வரைப் போராடினர். முடிவில் இந்தியர்களுக்குச் சில நன்மைகள் ஏற்பட்டன. பிறகு இவர் இந்தியாவிற்குத் திரும்பினர்.

இந்தியாவுக்குத் திரும்பியதும், இந்தியத் தேசீய விஷயங்களில் கலந்து உழைக்க ஆரம்பித்தார். இந்தியத் தேசீய சபையான **காங்கிரஸ் மகா சபையில்** சேர்ந்து வேலை செய்தார். அஹிம்சை வழிகளிலேயே இந்தியர் சுதந்திரத்திற்காகப் பாடுபடவேண்டும் என்று எல்லோருக்கும் கூறினர். இந்தியர்களில் பெரும்பாலோர் இவர் சொற்படி நடந்தனர்.

சுதந்திரப் போராட்டம் அஹிம்சை முறையில் நடந்தது. அதன் பலனுக சுய ஆட்சி அளிக்கப்பட்டது. காங்கிரஸ் கட்சியார் பல மாகாணங்களில் ஆட்சி செய்துவந்தனர். 1947-ம் வருஷம் ஆகஸ்டு மாதம் 15-ம் தேதி இந்தியாவுக்குச் சுதந்திரம் அளிக்கப்பட்டது.

உலகப்புகழ் பெற்ற தேசத் தலைவராயிருந்தும், காந்தியவர்கள் எளிய வாழ்க்கை நடத்தி வந்தார். அவரிடம் ஆடம்பரம் சிறிதும் இருக்க வில்லை. புத்தர், ஏசுநாதர் முதலிய அவதாரப் புருஷர்களைப் போல், அஹிம்சையும், அன்பையுமே தமது ஆயுதங்களாக உபயோகித்து வந்தார். மதுவிலக்கு, நாட்டுக் கைத்தொழில்களின் அபிவிருத்தி, தாழ்த்தப்பட்டவர்களின் முன்னேற்றம் முதலிய விஷயங்களில் மிகவும் ஊக்கமாக உழைத்து வந்தார். ஏழை மக்களின் நன்மைக்காகவே என்றும் ஓயாமல் பாடுபட்டு வந்தார். இவர் சாந்த குணத்தின் அவதாரம் என்றே சொல்லலாம். இது காரணமாகவே இவரை **மகாத்மா காந்தி** என்று யாவரும் போற்றுகின்றனர்.

இவர் 1948-ம் வருஷம் ஜனவரி மாதம் 30-ம் தேதி தேசத்திற்காகத் தன் உயிரையும் அர்ப்பணம் செய்தார். இவருடைய புகழ், உலகம் உள்ளளவும் போற்றப்படும் என்பதில் ஐயமில்லை.

## பயிற்சியும் கேள்வியும்

I (1) பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் அமை:— அவமதிக்க; வாதாடினர்; பெரும்பாலோர்; பொருட்படுத்த; கட்சியார்; முறையில்; ஊக்கம்; காரணமாக. (2) இவரை நாம் நம் பாரதநாட்டுத் தவப்புதல்வர் என்று போற்றுகிறோம். இங்கிலாந்துக்குச் சென்று பாரிஸ்டர் பரீக்ஷையில் தேறப் பிரியம் கொண்டார். மேற்சொன்ன வாக்கியங்களில் தடித்த எழுத்தாயுள்ள வார்த்தைகளை உபயோகித்து அர்த்தம் வேறுபடாமல் வேறு வாக்கியங்கள் எழுது. (3) இப்பாடத்தில் இரண்டு வார்த்தைகள் சேர்ந்து வந்திருப்பதையும் இரண்டு வார்த்தைகளைச் சேர்த்து எழுதக் கூடியதுமான வார்த்தைகளையும் எடுத்தெழுது.

II (1) மகாத்மா காந்தியின் முழுப்பெயரென்ன? (2) இவருடைய பிதாவுடையவும் பாட்டனுருடையவும் வேலை என்ன? (3) இவருடைய கொள்கை என்ன? (4) கடைசியாக எந்தக் காரியத்தில் ஈடுபட்டு வேலை செய்தார்?

## 19. சுத்தம் சோறு போடும்

| | | | |
|---|---|---|---|
| பொறுத்து | தகுந்த | உடம்பு | அவசரம் |
| கழுவாமல் | காய்ச்சல் | புழுதி | தலைவலி |

தாய் :—சீனு! நீ பள்ளிக்கூடம் போக நேரம் ஆகவில்லையா? இன்னும் விளையாடிக் கொண்டிருக்கிறயே!

சீனு :—அம்மா! இன்னும் நேரம் ஆகவில்லை. கொஞ்சநேரம் பொறுத்துப் பள்ளிக்கூடம் போகலாம்.

தாய் :—சீனு! உன் உடை ஏன் இவ்வளவு அழுக்காய் இருக்கிறது? இதைப் போட்டுக் கொண்டா பள்ளிக்கூடம் போகப் போகிறய்?

சீனு :—அம்மா! நான் விளையாடும்போது ஒரு பையன் என்னேடு சண்டைக்கு வந்தான். நான் அவனேடு சண்டை செய்து மண்ணில் விழுந்து புரண்டேன். அதனல் என் உடை முழுதும் அழுக்காய் விட்டது.

தாய் :—சீனு! இந்த வெயில் நேரத்தில் விளையாடுவது தேகத்திற்குக் கெடுதல் செய்யும். பள்ளிக்கூடத்தில் படிக்கும் பிள்ளைகளுக்கு ஏற்றதும் இல்லை. விளையாடும்போது புழுதியிற் புரளுவதும் மற்றப் பிள்ளைகளோடு சண்டை செய்வதும் உனக்குத் தகுந்த காரியங்கள் அல்ல.

சீனு :—அம்மா! அப்படியானல் நான் விளையாடவே கூடாதா? விளையாடும்பொழுது புழுதி படாதா?

தாய் :—சீனு! நீ விளையாடுவதற்கு நேரம் இல்லையா? மாலையில் பள்ளிக்கூடத்திலிருந்து வந்த பிறகு தான் விளையாடவேண்டும். அப்படி விளையாடுவதிலும் உடையிலும் உடம்பிலும் அழுக்குப் படாமல் விளையாடவேண்டும்.

சீனு :—அம்மா! எனக்கு பசிக்கிறது. சோறு போடு. நான் சீக்கிரம் பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டும்.

தாய் :—சீனு! உன் கை கால்கள் எல்லாம் புழுதியாய் இருக்கின்றன. உடைகள் மிகவும் அழுக்காய் விட்டன. இப்பொழுது அவசரப்பட்டு சாப்பாடு போடச் சொல்லுகிறயே?

சீனு :—அம்மா! எப்படியாவது நான் பள்ளிக்கூடத்திற்குப் போக வேண்டுமே?

தாய் :—சீனு! பள்ளிக்கூடத்துக்கு இப்படியே போகலாமா? உபாத்தியாயர் உன் தேகத்தையும் உடையையும் பார்த்து ஒன்றும் சொல்ல மாட்டாரா?

சீனு :—ஆம் அம்மா! நேற்றுக் கூடக் கோபித்துக் கொண்டார். இனிமேல் இப்படி வராதே என்றூர்.

தாய் :—பார்த்தாயா! உன் உபாத்தியாயர் கோபித்துக் கொண்டும் நீ புழுதியில் போய் விளையாடினையே. கை கால்களில் உள்ள புழுதியைத் தேய்த்துக் கழுவாமல் நீ சாப்பிடக்கூடாது. அப்படிச் சாப்பிட்டால் அடிக்கடி வியாதி வரும். இந்த மாதிரி அழுக்கான உடையைக் கட்டிக் கொண்டாலும் வியாதி ஏற்படும். இதனால் தான் உனக்கு அடிக்கடி தலைவலி, காய்ச்சல் முதலிய வியாதிகள் வருகின்றன. வாரந்தோறும் வியாதியாய்ப் படுத்துக் கொள்கிறாய். அதனால் உனக்கும் கஷ்டம். எனக்கும் கஷ்டம்.

சீனு :—அப்படியானால் இன்று எனக்குச் சாப்பாடு இல்லையா?

தாய் :—சுத்தமாய் இருந்தால்தான் சாப்பாடு கிடைக்கும். ஆகையால் நீ இப்பொழுதே வேகமாய்ப் போய், குளிர்ந்த நீரில் நன்றாய் அழுக்குத் தேய்த்துக் குளித்துவிட்டு வா. வேறு சுத்தமான உடை தருகிறேன். உடுத்திக்கொண்டு சாப்பிட்டுப் பள்ளிக்கூடம் போகலாம். இனிமேல் நீ எல்லா நேரத்திலும் விளையாடக்கூடாது. மாலையில் தான் விளையாடவேண்டும். பள்ளிக்கூடம் போக இன்னும் நேரமிருக்கிறது. அவசரமில்லை.

சீனு :—நான் இனிமேல் நீங்கள் சொன்னபடியே நடக்கிறேன். உபாத்தியாயர் கோபித்ததையும், தாங்கள் கூறியதையும் மறக்கவே மாட்டேன்.

சீனு தன் தாய் சொற்படியே நடந்து நன்மையடைந்தான். அதனால் அவனுக்கு வியாதியே வரவில்லை. ஆகையால் பிள்ளைகளே! நீங்களும் சுத்தமாக இருங்கள்.

173794

### பயிற்சியும் கேள்வியும்

I (1) பின்வருவனவற்றிற்கு எதிர்ப்பதம் கூறு :—வெயில் ; சண்டை ; மாலை ; சுகம் ; சுத்தம். (2) பின்வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் அமை :—இனிமேல் ; சுத்தம் ; பொறுத்து ; தகுந்த ; உடம்பு ; அவசரம் ; கழுவாமல் ; வாரந்தோறும்.

II (1) இப்பாடத்தில் யார் யாருக்கு சம்பாஷணை நடக்கிறது ? (2) சாப்பாடு கிடைக்குமுன் சீனு என்ன செய்யவேண்டியதாயிற்று ?

## 20. ஒற்றுமை

**மூடத்தனமாய் மாத்திரம் அகப்பட்டு இனத்தார் விடுவி வலை**
**அனைவர்க்கும் தானியங்கள் வனத்தில் ஒற்றுமை வலிமை**

பறவை பிடிக்கும் வேடன் ஒருவன், ஒரு காட்டில் தன் வலையை விரித்து, தானியங்களை அதில் இறைத்துவிட்டு ஓர் பக்கத்தில் ஒளிந்திருந்தான். அப்போது பக்கத்தில் இருந்த மரத்தின் மேல் ஒரு புருக் கூட்டம் வந்திறங்கியது. புருக்கள் அங்கு இறைக்கப்பட்டிருந்த தானியங்களைத் தின்ன ஆசை கொண்டன. அப்போது அக் கூட்டத்துக்குத் தலைமையான **சித்திரக்கிரீவன்** என்னும் புரு மற்றவர்களை நோக்கி, "மனிதர் இல்லாத இக்காட்டில் தானியம் எப்படி வந்தது? இதில் ஏதோ சூது இருக்கிறது. நன்றாய் யோசனை செய்துதான் நாம் கீழே இறங்க வேண்டும்" என்றது.

ஆனால் மற்றப் புருக்கள் பசியினால் சித்திரக்கிரீவனுடைய பேச்சைக் கேட்கவில்லை. உடனே கீழே இறங்கித் தானியத்தைத் தின்ன ஆரம்பித்தன. அதனால் வலையில் அகப்பட்டுத் தத்தளித்தன. இதைக் கண்ட சித்திரக்கிரீவன், "ஐயோ! என் இனத்தார் யாவரும் வலையில் அகப்பட்டுக் கொண்டார்கள். நான் மாத்திரம் தப்பித்து என்ன பிரயோஜனம்?" என்று எண்ணி அதுவும் வலையில் அகப்பட்டுக் கொண்டது. புருக்கள் எல்லாம் சித்திரக்கிரீவன் சொல்லியதைக் கேட்காததற்காக வருத்தப்பட்டன.

அப்போது சித்திரக்கிரீவன் மற்றப் புருக்களைப் பார்த்து, "நடந்ததை நினைத்து வருந்துவதால் என்ன பயன்? இப்போது நாம் எல்லோரும் ஒன்று சேர்ந்து, வலையைத் தூக்கிக்கொண்டு பறந்து

செல்ல வேண்டும். இல்லாவிடில் நாம் தப்ப வழியில்லை'' என்று கூறியது. இதற்குள் புருக்களெல்லாம் வலையில் அகப்பட்டுக் கொண்டதைக் கண்ட வேடன், சந்தோஷத்தோடு அவைகளைப் பிடிக்கச் சென்றான். அப்பொழுது எல்லாப் புருக்களும் ஒற்றுமையுடன் பறந்து போயின.



இதைக் கண்ட வேடன் ஆச்சரியப்பட்டு அவைகளின் பின்னேயே ஓடினான். புருக்களோ கண்ணுக்கு எட்டாத தூரத்தில் போய்விட்டன. வேடனும் வருத்தத்துடன் வீடு திரும்பினான். சித்திரக்கிரீவனும் புருக் கூட்டமும் மற்றொரு வனத்தில் போய் இறங்கின. அவ்வனத்தில் சித்திரக்கிரீவனுடைய சிநேகிதனான இரணியன் என்னும் எலியரசன் இருந்தது. புருக்கள் இறங்கிய சத்தத்தைக் கேட்ட

இரணியன், தன் வளையிலிருந்து வெளியே வந்து, "சிநேகிதா! என்ன விசேஷம்?" என்று கேட்டது.

அதற்குச் சித்திரக்கிரீவன், "நண்பா! நாங்கள் மூடத்தனமாய் இவ்வலையில் அகப்பட்டுக் கொண்டோம். உன் கூர்மையான பற்களால் இந்த வலையைக் கடித்து, அறுத்து எங்களை விடுவி" என்றது. இரணியனும் அவ்வாறே செய்தது. எல்லாப் புறாக்களும் விடுபட்டு சந்தோஷித்தன.

புறாக்கள் முதலில் ஒன்றுபடாததால் வலையில் அகப்பட்டுக் கொண்டன. பிறகு அவைகள் ஒன்றுபட்டதால் வலையோடு பறந்து தப்பின. இதனால் **ஒற்றுமை எல்லோருக்கும் அவசியமானது** என்பது நன்கு விளங்கும்.

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே—நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே."—பாரதியார்

## சேர்ந்து வாழ்வதே சிறந்த வலிமை

### பயிற்சியும் கேள்வியும்

I (1) பின் வரும் வார்த்தைகளை வாக்கியங்களில் அமை:—அகப்பட்டு; விரித்து; வனத்தில்; அனைவரும்; மூடத்தனமாய்; இனத்தார்; ஒற்றுமை; கூர்மை; (2) கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளை அமை:—(ஸ) புறாக்களோ— எட்டாத தூரத்தில் போய்விட்டன. (ரி) வேடனும்—வீடு திரும்பினான். (க) சித்திரக்கிரீவனும் புறாக் கூட்டமும்—வனத்தில் போய் இறங்கின.

II (1) புறாக்கள் எதனால் கஷ்டத்திற்குள்ளாயின? (2) மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம் என்பதை இக்கதையின் மூலம் ரூபி. (3) புறாக்கள் வலையையும் தூக்கிக்கொண்டு வேடனுக்கு அகப்படாமல் பறந்தோட அவைகளிடம் காணப்பட்ட குணம் என்ன? (4) தலைவனின் பெருந்தன்மையைக் குறிக்கும், இரண்டு குறிப்புகள் எழுது.



## 21. வெண்ணிலா

அந்தரத்திலே யுலாவும் வெண்ணிலாவே—உன்னை
ஆக்கினவர் யாரோ சொல்வாய் வெண்ணிலாவே. 1

ஆனந்தமாய் ஆடிவரும் வெண்ணிலாவே—உன்
அன்புடையார் யாரோ சொல்வாய் வெண்ணிலாவே. 2

இவ்வுலகில் நன்னிலவை வெண்ணிலாவே—நீ
எங்கிருந்து பெற்றளிப்பாய் வெண்ணிலாவே. 3

ஈசனுனைச் சடையில் வைத்தான் வெண்ணிலாவே—எங்கும்
இன்ப நிலாத் தந்திடவோ வெண்ணிலாவே. 4

உலகமெலாம் சூழ்ந்துவரும் வெண்ணிலாவே—உனக்கு
உடம்பெல்லாம் வெள்ளிமயம் வெண்ணிலாவே. 5

ஊக்கமுற மாலைவரும் வெண்ணிலாவே—உன்போல்
ஊக்கமுற என்னைச் செய்வாய் வெண்ணிலாவே. 6

எங்கள் மனம் இன்பமுற வெண்ணிலாவே—நீ
எங்கு வித்தை கற்றுவந்தாய் வெண்ணிலாவே. 7

ஏழைகளின் நல்விளக்காம் வெண்ணிலாவே—இன்னும்
எங்கெல்லாம் நீ போய்வருவாய் வெண்ணிலாவே. 8

ஐயமின்றி உன்னாலன்றோ வெண்ணிலாவே—நாங்கள்
ஆனந்தமாய்க் கூத்தாடுவோம் வெண்ணிலாவே. 9

ஒத்தபொருள் உன்னழகை வெண்ணிலாவே—இவ்
வுலகினில் இல்லையன்றோ வெண்ணிலாவே. 10

ஓகோ நீ நாளுக்குநாள் வெண்ணிலாவே—உன்
உடம்பேனோ இளைக்கின்றாய் வெண்ணிலாவே. 11
ஔவையாரோ அழகுமானோ வெண்ணிலாவே—உன்னை
அண்டிமறைந் துள்ளிருப்பார் வெண்ணிலாவே. 12

—நா. கனகராஜ ஐயர்

## 22. இயேசு கிறிஸ்துநாதர்

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அடக்கம் செய் | காணிக்கை | முன்னோடி | தியாகம் | நிந்தனை | தர்க்க |
| ஞானஸ்நானம் | பரலோகம் | உபவாசம் | நியமிக்க | நேசிக்க | தயார் |
| சந்தேகித்தார் | செல்வாக்கு | உபதேசம் | துறந்தார் | பலிக்க | கன்னி |
| சாஸ்திரிகள் | செவிடர்கள் | மன்னியும் | அடைந்து | விதிக்க | எளிய |
| சாட்சிகள் | பொருட்டு | தரிசனம் | சொஸ்தம் | அசரீரி | மரண |
| போதித்தார் | மரித்தோர் | ஆக்கினை | சோதிடம் | இருதயம் | குருடர் |
| | | வியாபித்திருக்கிறது | | | |

சுமார் இரண்டாயிர வருஷங்களுக்கு முன் **அரேபியா** தேசம் செழிப்புற்றிருந்தது. அதில் கடவுள் பக்தியுள்ள ஜனங்கள் **யூதர்** என்ற ஒரு ஜாதியாராவார். இவர்கள் வியாபாரத்தின் பொருட்டு உலகமெங்கும் பரவியிருந்தனர். அவர்கள் தான் செல்வாக்குடையவர்களாயு மிருந்தார்கள். **மேசியா** அல்லது **கிறிஸ்து** அவர்களில் ஒரு குடும்பத்தில் தோன்றுவார் என்று சோதிடம் சொல்லப்பட்டிருந்தது. குறிப்பிட்ட காலத்தில் பக்தியுள்ளவளும் கன்னியாயுமிருந்த **மரியாள்** என்ற ஒரு எளிய பெண்ணின் வயிற்றில் கிறிஸ்து பிறந்தார். இவளுக்கென்று நியமிக்கப்பட்டிருந்த **யோசேப்பு** என்பவர் நீதியும் நற்குணசாலியாயு மிருந்தார்.

கிறிஸ்துவானவர் பிறந்தவுடன் ஒரு அதிசய நட்சத்திரம் தோன்றியது. அதைக் கண்ட ஆசியாவிலிருந்த மூன்று வான சாஸ்திரிகள் குழந்தை கிறிஸ்துவைத் தரிசனம் செய்து பாதகாணிக்கை செலுத்தித் திரும்பினர். “இவர் யூதர்களுக்கு அரசர் ஆவார்” என்று சோதிடர் கூறினர். அதனால் **ஏரோது** என்ற யூத அரசர் இவரைக் கொல்ல முயன்றார். அவர் முயற்சி பலிக்கவில்லை. இவர் கல்வியிலும்

ஞானத்திலும் நாளுக்குநாள் தேர்ச்சி அடைந்து வந்தார். இவரது பன்னிரண்டாவது வயதில் ஒரு சமயம் தர்க்க சாஸ்திரிகளுடன் பெரிய தர்க்கம் செய்தார். இவருடைய தெய்வீகத் தன்மை அப்பொழுதே நன்கு விளங்கியது.

இவருடைய பிறப்பையும் இவருடைய சக்தியையும் பற்றி யோவான் என்ற ஒரு முன்னோடி ஜனங்களுக்கு எடுத்துச் சொன்னார். கிறிஸ்துவும் அவரிடம் போய் ஞான ஸ்நானம் பெற்றார். அப்பொழுது "இவர் என்னுடைய நேச குமாரர். இவரிடம் பிரியமாய் இருக்கிறேன்' என்று வானத்திலிருந்து ஒரு அசரீரி வாக்கு உண்டாயிற்று. அதன் பின் அவர் நாற்பது நாள் உபவாசமிருந் தார். முழுத் தெய்வீகத் தன்மை அவருக்கு ஏற்பட்டது.



பின்பு ஜனங்களுக்கு "தன்னைப் போல் பிறரையும் நேசிக்க வேண்டும். தனக்கு மற்றவர்கள் என்ன செய்ய வேண்டுமென்று விரும்புகிறோமோ, அதையே தான் நாமும் அவர்களுக் குச் செய்யவேண்டும். முழு இருதயத் தோடும், முழு அன்போடும், முழு பலத்தோடும் கடவுளை வழிபட வேண்டும்" என்ற நீதியைப் போதித்தார். அவர் மூன்றரை வருஷ காலம் குருடருக்குப் பார்வையளித்தார்; செவிடர்களுக்குக் காது கேட்கச் செய்தார்; நொண்டிகளை நடக்கச் செய்தார்; வியாதியஸ்தர் களைச் சொஸ்தமாக்கினார்; மரித்தோரை உயிரோடெழுப்பினார். இந்த விதமாகத் தன்னை தெய்வ அவதாரம் என்று நிரூபித்தார்.

ஏரோது என்ற யூதர்களின் அரசர் இவர் புகழைக்கண்டு பொறாமை கொண்டார். 'தன்னைத் தள்ளிவிட்டு அவர் அரசரானாலும் ஆகலாம்' என்று சந்தேகித்தார். பொய்ச் சாட்சிகள் தயார் செய்யப்

பட்டன. ராஜ நிந்தனே, தெய்வ நிந்தனே ஆகிய இரண்டு குற்றங்கள் அவர்பேரில் சுமத்தப்பட்டன. இக்குற்றங்களுக்காக அவருக்கு மரண தண்டனே விதிக்கப்பட்டது. அத்தேசத்தின் அக்கால வழக்கப்படி சிலுவை என்ற மரத்தில் ஆணிகளால் அடிக்கப்பட்டார். அப்போது அவர் "கடவுளே! இவர்களே மன்னியும். இவர்கள் செய்கிறது இன்னதென்று அறியாதிருக்கிருர்கள்" என்று கடவுளே வேண்டிக்கொண்டார். உயிர் துறந்தார். அவரை ஒரு கல்லறையில் அடக்கம் செய்தார்கள்.

மூன்ரும் நாள் அவர் உயிரோடு எழுந்தார். தன்னேப் பின்பற்றிய சீடர்களுக்குத் தோன்றினுர். தன்னுடைய உபதேசத்தை உலகத்தில் பரப்பும்படி ஆக்கினேயிட்டார். நாற்பது நாள் அவர்களோடிருந்து, சீடர்கள் எல்லோரும் பார்த்திருக்கும்போதே பரலோகம் சென்ருர்.

இவ்வாறு மனிதர்களுடைய அறியாமைக்காகத் தன்னேயே தியாகம் செய்த இயேசு கிறிஸ்துநாதர் உலகப் புகழ் அடைந்தார். இதனுலேயே அவருடைய மதம் இன்றும் உலகமெங்கும் வியாபித்திருக்கிறது.

## பயிற்சியும் கேள்வியும்

I (1) பின்வரும் வார்த்தைகளே வாக்கியங்களில் அமை :—ஆக்கினே ; செழிப்பு ; தரிசனம் ; பொருட்டு ; அயர்ந்து ; எளிய ; நியமிக்க ; போதித்தார். (2) பின்வரும் வாக்கியங்களில் கோடிட்ட இடங்களில் தகுந்த வார்த்தைகளே அமைத்து எழுது :— (ஸ) இவருடைய — இவருடைய — பற்றி யோவான் என்ற ஒரு முன்னேடி ஜனங்களுக்கு — ச்சொன்னுர். (ரி) ஏரோது என்ற — அரசர் இவர் புகழைக்கண்டு—கொண்டார். (க) தன்னேப்போல — நேசிக்கவேண்டும். (3) இப்பாடத்திலுள்ள வினேச் சொற்களே எடுத்தெழுது.

II (1) இப்பாடத்தில் நான்காவது பாராவை இன்று நடக்கிறதாய் பாவித்து எழுது. (நிகழ் காலத்தில்) (2) கிறிஸ்துவானவர் கடவுளின் அவதாரம் என்பதற்குச் சில உதாரணங்கள் கூறு.

# 23. பருத்தி

| | | | | | |
|---|---|---|---|---|---|
| சேகரிப்பார்கள் | வெடிக்கும் | பிரிவாக | உதிர்ந்து | கம்பளி | வசதி |
| ஏழைகளுக்கு | பிஞ்சுகள் | இதழ்கள் | ராட்டை | பருத்தி | கூரை |
| சாணிப்பால் | யந்திரம் | வேயவும் | எரிக்க | கோடை | மணை |
| உஷ்ணம் | தட்டிகள் | கிருமிகள் | கரிசல் | சுளை | |

நாம் உடுத்தும் உடைகளில், சில பஞ்சினால் செய்யப்பட்டவை ; சில பட்டினால் செய்யப்பட்டவை ; சில கம்பளியினால் செய்யப்பட்டவை. இவைகளில் பஞ்சினால் செய்யப்பட்டவைகள்தான் அதிகம். இந்த ஆடைகள் செய்ய பஞ்சு கொடுத்து உதவுவது பருத்தி என்னும் ஒரு வகைச் செடி.


பருத்தி உஷ்ணப் பிரதேசங்களில் தான் அதிகமாய் உண்டாகும். பருத்தியில் அநேக வகைகள் உண்டு. பருத்திச்செடி, கரிசல் நிலத்தில்தான் செழித்து வளரும். நல்ல பலனையும் கொடுக்கும். கரிசல் நிலத்தைக் கோடை காலத்தில் நன்றாய் உழுது புழுதியாக்க வேண்டும். மழை காலத்தில் ஒன்று இரண்டு மழை பெய்ததும் நல்ல பருத்தி விதைகளை எடுத்து சாணிப் பாலூட்டி விதைக்க வேண்டும். விதைத்த விதை மண்ணுள் மறையும்படி மறுபடியும் உழவேண்டும்.




கொஞ்ச நாளில் விதை முளைக்கும். பத்து அல்லது பதினைந்து இலைகள் விட்டதும் களையெடுக்கவேண்டும். பின்பு ஒரு அடி உயரம் வளர்ந்ததும் களைக்கொத்தியால் மேல் மண் புரளும்படியும் களைகள் அறும்படியும் கொத்தி விடவேண்டும். மேல் மழை ஒன்று பெய்தால் செடி நன்றாய் வளரும்.

மூன்று மாதங்களில் பூக்கள் தோன்றும். இப்பூக்கள் மஞ்சள் நிறமாய்ப் பெரியதாயிருக்கும். சில தினங்களில் இப்பூ இதழ்கள் உதிர்ந்து விடும். உதிர்ந்தவிடத்தில் பிஞ்சுகள் தோன்றும். இப் பிஞ்சுகள் பூத்

தோன்றி ஒரு மாதத்திற்குள் திரண்டு காய்களாகி, சூரிய வெப்பத்தினுல் வெடிக்கும். வெடித்த காய்கள் மூன்று பிரிவாகப் பிரிந்து நிற்கும். அந்தப் பிரிவுக்குள் பருத்தி நிறைந்திருக்கும். இப்படியாக முன்னும் பின்னுமாக மூன்று மாதம்வரை பருத்தி வெடிக்கும். விவசாயிகள் ஆணும் பெண்ணுமாகப் போய் ஒருநாள் விட்டு ஒருநாள் பருத்தியைச் சேகரிப்பார்கள். ஒவ்வொரு காயில் வெடிக்கும் பருத்தி 'சுளை' என்று சொல்லப்படும். இந்தச் சுளையைப் பிரித்துப் பார்த்தால் அதனுள்ளே இரண்டு மூன்று விதைகளிருக்கும்.



இப்படிச் சேகரித்த பருத்தியை அதற்கென்று ஏற்பட்ட மணைகளில் வைத்துச் சுற்றினுல் பருத்தியிலுள்ள பஞ்சு வேறு, விதை வேருகப் பிரிந்து விடும். பஞ்சை ராட்டைகளிலும் யந்திரங்களிலும் வைத்து நூலாக நூற்று நெசவு செய்து துணிமணியாகச் செய்கிருர்கள். விதையை மாட்டிற்கு நல்ல உணவாகக் கொடுக்கலாம். விதை விதைப்பதற்காகவும் சேகரித்து வைக்கலாம். பருத்தி விதையிலிருந்து பால் எடுத்துச் சாப்பிடலாம். அது தேக உஷ்ணத்துக்கு நல்லது. பருத்தி விதையிலிருந்து ஒருவித எண்ணை எடுப்பதும் உண்டு. பருத்திச் செடி ஒரு வருஷத்திற்கு மேல் நல்ல பலனைக் கொடுக்காது.



ஒரு வருஷத்திற்கு மேல் இருந்தால் அதிலிருந்து ஓர் விதக்கிருமிகளுண்டாகின்றன. ஆகையால் விவசாயிகள் காற்றுக்காலம் வந்ததும் பருத்திச் செடியைப் பிடுங்கிவிடுவார்கள். பிடுங்கின செடிகள், மறைவு தட்டிகள் பின்னவும் காய்ந்தபின் அடுப்பெரிக்கவும், சில இடங்களில் கூரை வேயவும் உதவுகிறது.

பருத்தி ஆடை ஏழைகளுக்கு எளிதில் கிடைக்கக் கூடியது. நல்ல சுகம் தரக்கூடியது. நம் தேசத்தில் பருத்தி ஏராளமாய் உற்பத்தியாகவேண்டிய வசதிகளிருக்கின்றன. நூல் நூற்றல், நெசவு நெய்தல், கயிறு திரித்தல் முதலிய தொழில்களை விருத்தி செய்ய இது மிகவும் உதவுகிறது.

ஆகையால் நாம் நமக்குப் பலவித ஆடைகள் அளித்து உதவும் பருத்தியை நன்கு வளர்த்து, அதன் மூலம் நம் நாட்டுக் கைத் தொழில்கள் முன்னேற்றம் அடையச் செய்ய வேண்டும்.

### பயிற்சியும் கேள்வியும்

I (1) பின்வரும் வார்த்தைகளைத் தகுந்த வாக்கியங்களில் அமை:—கரிசல், உதிர்ந்து, எரிக்க, பிரிவாக, வெடிக்கும், கோடை, ராட்டை, யந்திரம். (2) கோடை, அதிகமாய், நல்ல, மேல், களைகள்—இந்த வார்த்தைகளைப் பின்வரும் வாக்கியங்களில் தகுந்த இடத்தில் உபயோகப்படுத்து:— (ஸ) பருத்தி உஷ்ணப் பிரதேசங்களில்தான் உண்டாகும். (ரி) கரிசல் நிலத்தைக் காலத்தில் உழுது புழுதியாக்க வேண்டும். (க) பருத்திச் செடி ஒரு அடி உயரம் வளர்ந்ததும் களைக்கொத்தியால் மண் புரளும்படியும் களைகள் அறும்படியும் கொத்திவிட வேண்டும்.

II (1) பருத்தி எந்தப் பிரதேசத்தில் உண்டாகும் ? (2) பருத்திச் செடி உண்டாக்க முன் ஏற்பாடு என்ன செய்யவேண்டும்? (3) பருத்திச் செடியைப் பற்றி நீ பார்த்ததிலிருந்து மூன்று வாக்கியங்கள் எழுது. (4) பருத்தியினால் உண்டாகும் பிரயோஜனங்கள் என்னென்ன? (5) இப்பாடத்தில் கைத்தொழில் சம்பந்தப்பட்ட சாமான்களை எழுது. (6) பருத்தி சாகுபடி செய்ய சாதனமாய் உள்ள பொருள்கள் என்னென்ன ? (7) இதில் வரும் வினைச் சொற்களைப் பெயர்ச் சொல்லாக மாற்றக் கூடியவைகளை எழுது.

## 24. பருத்தி

(நொண்டிச்சிந்து)

பருத்தி வளர்வ துண்டு—வெள்ளைப்
பருத்தியை முதிர்ந்ததும் பறிப்பதுண்டு
பருத்தியை நூற்பதுண்டு—அந்தப்
பருத்தியி னுடையைத் தரிப்பதுண்டே. 1

பலவகைப் பருத்தி யுண்டு—அவை
பார்த்தறிந்து நூல்வளரப் பயிர் செய்குவோம்
நிலவகை தெரிந்துணர்ந்தே—வேண்டும்
நிறைபயன் வருநெறி நிலைத்துழைப்போம். 2

உண்ணவு முடுக்கவுமே—நிலத்தில்
உழைத்துப் பயனடைந்து பிழைப்பதுண்டே
உண்ணவும் பிறர்க்கடிமை—இடையில்
உடுக்கவும் பிறர் நெய்து கொடுப்பதுண்டே. 3

கருங்கண்ணிப் பருத்தியினைப்—பறித்துக்
கையினல் துகளெடுத்து நெய்யவுதவும்
பெருங்கண்ணி யிழை வரவே—நூற்கும்
பெருந்தொழில் முறைப்படி தெரிந்து கொள்வோம். 4

பருத்தியை வெயிலிடுவோம்—அதைப்
பார்த்து துகளெடுத்து நேர்த்தியுறவே
பொருத்தமா மணையிடுவோம்—விதை
போனபிற கெடுத்ததைப் போற்றுதல் செய்வோம். 5

வில்லிஞ லடித்துக் கொட்டுவோம்—சுற்றி
விழுதுகள் ஒதுங்கவே மேகம்போல் வரும்
நல்ல பஞ்சை யெடுத்திடுவோம்—அதை
நாமே பலகையினல் நன்குருட்டுவோம். 6

தூய வெண்மைமேவு மதையே—தக்ளி
சுற்றும் ராட்டை நூற்பவர்கள் பெற்று மகிழ்வார்
நேயமுற நூலினை நூற்பார்—அதை
நெய்வதற்குத் தக்கபடி கொய்து தருவார். 7

நின்றநிலை விளையாட்டாய்—நூற்க
நீளமில்லாக் கதிர்களே நேர்த்தியானவை
நன்றமர்ந்து நூற்பதனுக்கே—அறிஞர்
நன்கமைத்த சக்கரங்கள் நன்றமையுமே. 8

—நா. கனகராஜ ஐயர்

# 25. அதிவீரராம பாண்டியர்

| | | | | |
|---|---|---|---|---|
| கொழுத்தாடை | பெருமான் | விமரிசை | திறத்தில் | ஈடுபட்டு |
| இன்பத்தை | தொடங்கி | சோர்ந்து | ஒருவாறு | துதியாது |
| செங்கோல் | தமையனுர் | உற்சாகம் | மதினி | |

சுமார் நானூறு வருஷங்களுக்கு முன் திருநெல்வேலியிலுள்ள கொற்கை நகரில் அதிவீரராமர் என்ற பாண்டிய அரசர் ஆண்டுவந்தார். அவருக்கு வரதுங்கபாண்டியர் என்பவர் தமையனுர். அவர் திருக்கருவை என்னும் நகரில் செங்கோல் செலுத்தி வந்தார். இவர்களிருவரும் மதுரையில் ஆண்ட பாண்டியர்களுக்கு அடங்கியவர்களே.

அதிவீரரும் வரதுங்கரும் தமிழ், வடமொழியாகிய இரு பாஷைகளிலும் வல்லவர்கள். கவித்திறத்தில் மிகவும் சிறந்தவர்கள். வரதுங்க பாண்டியர் சிவபெருமானிடத்தில் மிகுந்த அன்பு கொண்டவர். அவர் பாடிய பாடல்களெல்லாம் சிவபெருமானைப் போற்றுவனவே. வரதுங்கரின் மனைவியாரும் தமிழில் வல்லவரே. ஆனுல் அதிவீரராமரோ உலக விஷயங்களில் ஈடுபட்டு உலக இன்பத்தைப் பற்றியே பாடி வந்தார்.

அதன்படியே அதிவீரராமர் தமிழில் நைடதம் என்ற நூலைப் பாடத் தொடங்கினுர். நைடதம் நளமகாராஜனுடைய கதையைக் கூறும் நூல். வழக்கப்படியே உலக இன்பங்களைப்பற்றி விமரிசையாகப் பாடினுர். இவ்வாறு பாதி நூல் முடிந்ததும் பாடல்களைத் தமையனுரிடம் காண்பித்தார். அவைகளைப் பார்த்து வரதுங்கர், "தம்பீ! எம்பெருமானைத் துதியாது மனிதனைப் புகழ்ந்து, இவ்வுலக இன்பத்தையே பாடினையே" என்று கூறி வருந்தினுர்.

இதைக் கேட்டதும் அதிவீரரார்மரது உற்சாகம் குறைந்து விட்டது. இருந்தபோதிலும் எடுத்த காரியத்தை முடிக்கவேண்டும் என்று எண்ணி, ஒருவாறு பாடி முடித்தார். முடிந்ததும் தமது சமஸ்தானப் புலவர்களிடம் காட்டினுர். அவர்கள் அவருடைய நூல் "கரும்பின் இனிப்பைப்போல் சிறந்து விளங்குகின்றது" என்றனர். பிறகு அதிவீரராமர் தனது நைடதத்தை, தமையனுரது மனைவியிடம் காட்டினுர். அந்த அம்மையார் அதைப் பார்த்து, "வேட்டை நாய்

காட்டிற்குச் செல்லும்போது ஊக்கத்துடன் சென்று, திரும்பிவரும் போது சோர்ந்து வருவதுபோல் இருக்கிறது" என்று கூறினர்.

அதிவீரராமர் இதைக் கேட்டு, பெருங் கோபங் கொண்டார். உடனே தன் ஊர் சென்று படைகளைத் திரட்டி, தமையனுரோடு சண்டை செய்யப் புறப்பட்டார். தன் தம்பி படையெடுத்து வந்ததைக் கேட்ட வரதுங்கர் ஒரு ஓலையில் "ஆருயிர்த் தம்பி! இவ்வுலகத்தில் **கர்ணன், இராவணன், அர்ச்சுனன்** இவர்களைப்போல் நீ இராதே. ஆனல் **ஸ்ரீராமனையும், பரதனையும்** போல் இரு" என்னும் பொருளுள்ள,

"செஞ்சுடரோன் மைந்தனையும் தென்னிலங்கை வேந்தனையும்
பஞ்சவரில் பார்த்தனையும் பாராதே—விஞ்ச
விரதமே பூண்டிந்த மேதினியை யாண்ட
பரதனையும் ராமனையும் பார்"

என்ற பாட்டை எழுதியனுப்பினர்.

இந்தப் பாட்டைப் பார்த்த அதிவீரராமர் மனம் வருந்தி தனது தப்பிதத்தை உணர்ந்தார். உடனே படைகளைத் திருப்பியனுப்பிவிட்டு, தமையனரிடம் சென்று அவரை வணங்கினர். அப்போது வரதுங்கர் "தம்பீ! உனது சமஸ்தானப் புலவர்கள் கூறியதையே உன் மதனியும் கூறினள். கரும்பை அடியிலிருந்து தின்றுகொண்டேபோனல், முதலில் இனிப்பும், அதன் கடைசியாக கொழுத்தாடைப் பக்கத்தில் உப்பும் தோன்றும். அதுபோலவே உன் மதனியும் உனது நைடதத்தை வேட்டை நாய்க்கு ஒப்பிட்டாள். ஆனல் பாடல்கள் சிறந்தவைகளே. ஆகையால் நீ மனம் வருந்த வேண்டாம்" என்றார்.

உடனே அதிவீரராமர் சந்தோஷித்து **நறுந்தொகை** என்னும் **வெற்றி வேற்கை** பாடினர். அதிவீரராமரைப் **பிள்ளைப் பாண்டியன்** என்றும் **தமிழ்வளர்த்த தென்னவன்** என்றும் சொல்வதுண்டு.

### பயிற்சியும் கேள்வியும்

I (1) பின் வரும் வார்த்தைகளைத் தகுந்த வாக்கியங்களில் அமை:—வருந்தி, வணங்கினர், சிறந்தவை, திரட்டி, கோபங்கொண்டார், திரும்பி. (2) இப்பாடத்தி லுள்ள சம்ஸ்கிருத வார்த்தைகளை எடுத்தெழுது.

II (1) அதிவீரராமர் எக்காரணத்தால் தன் தமையனர் மீது படையெடுத்தார்? (2) அதிவீரராமர் பாடிய நூல்களின் பெயர் என்னென்ன? (3) சமஸ்தானப் புலவர்களும் மதினியும் நைடதத்தின் நடையை எதற்கு ஒப்பிட்டனர்?

## 26. தேசிங்கு ராஜன்


| | | | | | |
|---|---|---|---|---|---|
| சிநேகத்தன்மை | ஈட்டியால் | கொடிய | குதித்து | வெற்றி | மேனி |
| சின்னபின்னம் | உதைக்கும் | மார்பை | விடுதலை | கப்பம் | மீட்க |
| நாகரிகத்திலும் | எறிந்தான் | கர்ப்பம் | எஞ்சி | நவாபு | தாவி |
| சேனாதிபதி | வண்ணம் | பிணம் | வசூல் | சவாரி | கற்பு |
| | விளம்பரம் | | இசைய | | |

டில்லியில் அரசாண்ட முகம்மதிய சக்கரவர்த்திகளுள் ஷா ஆலம் ஒருவர். அவரிடம் எவர்க்கும் அடங்காக் குதிரை ஒன்று இருந்தது. அது மிகவும் கொடிய குணமுடையது. பின்னால் போனால் உதைக்கும், முன்னால் வந்தால் கடிக்கும். அதை அடக்கவோ அதில் சவாரி செய்யவோ ஒருவராலும் முடியவில்லை.

சக்கரவர்த்தியும், அந்தக் குதிரையை அடக்கி அதில் சவாரி செய்கிறவனுக்குப் பெரிய பரிசு அளிப்பதாகத் தம் தேசம் முழுவதும் விளம்பரம் செய்தார். அநேகச் சிற்றரசர்கள் அக் குதிரையை வசப்படுத்த முயன்றனர். ஒன்றும் பலிக்கவில்லை. குதிரையை அடக்க முயன்று பின்னடைந்தவர்கள் எல்லோரும் சிறையில் இடப்பட்டனர். அவர்களில் நம் தென்னாட்டில் உள்ள **செஞ்சிக் கோட்டைச்** சிற்றரசராகிய **தரணி சிங்கும்** ஒருவர்.

தரணி சிங் அரசர் சிறையிலிடப்பட்டபொழுது, அவரது மனைவி கர்ப்பமாய் இருந்தாள். காலாகாலத்தில் ஒரு ஆண் குழந்தையும் பிறந்தது. அவனுக்கு தேசிங்கு என்று பெயரிட்டனர். அவன் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாய் வளர்ந்து வந்தான். அவனுக்குப் பதினெட்டு வயது நிறைந்தது. நிறைந்ததும் அவன் தனது தந்தையாரது சிறைவாசத்தைப் பற்றி அறிந்தான். டில்லிச் சக்கரவர்த்தியின் அடங்காக் குதிரையை அடக்கி, தன் தகப்பனரை மீட்க எண்ணங் கொண்டான்.

தன் பள்ளித் தோழன் முகம்மதுகானை கூட்டிக்கொண்டு டில்லி சேர்ந்தான். தன்னிஷ்டத்தை டில்லி சக்கரவர்த்திக்குத் தெரிவித்தான். சக்கரவர்த்தி முதலில் இதற்கு இசையவில்லை. தேசிங்கின் கட்டாயத்தின் பேரில் சக்கரவர்த்தியும் சம்மதித்தார். குதிரையும் வெளியே கொண்டு வந்து நிறுத்தப்பட்டது. தேசிங்கு பாய்ந்து எழுந்து அதன் பக்கம் போனான். குதிரையைத் தட்டிக்கொடுத்து அதன்மேல் குதித்து ஏறி



செஞ்சிக் கோட்டை

னான். குதிரையும் தாவிப் பாய்ந்தது. தேசிங்கோ அதை மனம்போல் போகவிட்டான். குதிரையும் வெகுதூரம் ஓடிக் களைத்தது. தேசிங்கும் வெற்றி பெற்றான். எல்லோரும் அவனைப் புகழ்ந்தனர். ஷா ஆலம் அக் குதிரையை அவனுக்கே கொடுத்தார். தரணி சிங்கும் விடுதலை யடைந்தார். தரணி சிங் வருஷா வருஷம் சக்கரவர்த்திக்குக் கட்ட வேண்டிய கப்பம் இனி கட்டவேண்டியதில்லை என்று உத்திரவு பிறந்தது. டில்லிச் சேனாதிபதி தன் மகளைத் தேசிங்குக்குக் கலியாணம் செய்து கொடுத்தான். செஞ்சிக்கோட்டைக்கு எல்லோரும் திரும்பினர்.

சிறிது காலத்தில் தரணிசிங் மரணமடைந்தார். தேசிங்கு பட்டத்துக்கு வந்தான். செஞ்சி, செல்வத்திலும் நாகரிகத்திலும் முதன்மை பெற்றது. முகம்மதுகான் சேனதிபதி ஆனுன். அவனுக்குக் கலியாணமும் ஏற்பாடாயிற்று. டில்லிச் சக்கரவர்த்திக்காக ஆற்காட்டு நவாபு கப்பம் வசூல் செய்தான். அவன் தேசிங்கிடமும் கப்பம் கேட்டனுப்பினுன். இது கேட்ட தேசிங்கு கடுங்கோபம் கொண்டான். "என்னைச் சண்டையில் ஜெயித்து கப்பம் வாங்கிக்கொள்ளட்டும்'' என்று சொல்லி அனுப்பினுன்.

முகம்மதுகானுக்கு கலியாணம் நடந்துகொண்டிருந்த சமயம் செஞ்சியில் சண்டையும் ஆரம்பித்தது. இது அறிந்த முகம்மதுகான் கலியாணத்தை நிறுத்திவிட்டுச் சண்டைக்குச் சென்றுன். நவாபின் சேனையை சின்னுபின்னப்படுத்தினுன். எதிர்த்து நிற்பார் ஒருவரும் இல்லை. முகம்மதுகான் கோட்டைக்குத் திரும்பினுன். வழியில் பிணக்குவியலின் மறைவிலிருந்து ஒருவன் அவனை ஈட்டியால் குத்திக்கொன்றுன். இதையறிந்த ராஜாதேசிங்கு சினங்கொண்டான். சீறி எழுந்தான். யுத்தகளத்திற்குச் சென்றுன். எஞ்சி நின்ற நவாபின் சேனையையும் சின்னுபின்னம் செய்தான். முகம்மதுகான் இல்லாமல் உயிர் வாழ அவன் விரும்பவில்லை. தன் வாளை உயரே எறிந்தான். மார்பை அதற்கு நேராக ஏந்தினுன். வாள் அவன் மார்பில் பாய்ந்து, அவன் உயிரை வாங்கியது. தேசிங்கின் பதின்மூன்று வயதுள்ள மனைவி தீ வளர்த்து அதில் விழுந்து இறந்தாள். அவள் கற்பின் மேன்மைக்கும் தேசிங்கின் வீரத்திற்கும், உயர்ந்த சிநேகத்தன்மைக்கும் அவர்களை இன்றும் உலகம் போற்றுகிறது.

### பயிற்சியும் கேள்வியும்

I (1) பின் வரும் வார்த்தைகளைத் தகுந்த வாக்கியங்களில் அமை :—விடுதலை, கொடிய, கப்பம், குதித்து, மீட்க, சின்னுபின்னம், வெற்றி, சவாரி. (2) இப்பாடத்தில் வரும் இடங்களின் பெயர், பிராணிகளின் பெயர் இவைகளைத் தனித்தனி எழுது. (3) இப்பாடத்தில் வரும் வினைச் சொற்களை எழுதி அவைகளை வருங்காலத்தில் பிரயோஜனப்படுத்தும்போது எப்படி மாறும் என்றெழுது.

II (1) தரணி சிங் என்ன காரணத்தினால் சிறையிலிடப்பட்டார்? (2) தேசிங்கு ராஜன் குதிரையை அடக்கினதால் அடைந்த லாபம் என்ன? (3) நவாபுக்கும் தேசிங்கு ராஜனுக்கும் நடந்த சண்டைக்குக் காரணம் யாது? (4) முகம்மதுகான் யார்? (5) தேசிங்கு ராஜன் மரணம் எத்தகையது?

## 27. தேசிங்கு ராஜனின் வீர மரணம்

வலதுகாலும் விழுந்துபோச்சுது பாராசாரிக்கு
இடதுகாலும் விழுந்துபோச்சுது பாராசாரிக்கு
இரண்டுகாலும் விழுந்துபோனதை ராஜா பார்த்தானும்
குதிரையைவிட்டுக் கீழே குதித்தான் சிப்பாய் தேசிங்கு
குதிரையை வெட்டி அழுதானையா ராஜாதேசிங்கு

நவாபுபாளையம் புகுந்தானையா சிப்பாய் தேசிங்கு
கொக்குத்திரளில் ராஜாளிபோலப் புகுந்து வெட்டுகிறான்
வெள்ளரிக்காய் வீசினாற்போல் வீசிப்போடுகிறான்
இருந்தபாளையம் எல்லாம் விழுந்தது தேசிங்கு கையாலே
நவாபின்மேலே திரும்பினானையா ராஜாதேசிங்கு

நவாபும் ஓடி ஒளிந்தானையா நடுவான பாளையத்தில்
கோபம்வந்து மூண்டுகொண்டது ராஜாவுக்கானாலும்
கொக்கரித்துத் தண்டில் விழுந்தான் சிப்பாய்தேசிங்கு
ஆனை குதிரை சேனையெல்லாம் அடியோடே மாண்டதாம்
நவாபுஜனங்கள் போனவழியே நானுஞ் சொல்லமாட்டேன்

இவனுக்கெதிரி யாரையும் காணோம் நவாபுபாளையத்தில்
மண்டிபோட்டு உட்கார்ந்தானையா ராஜாதேசிங்கு
“என்னுயிர் வாங்க எனக்கெதிரி யாரையுங்காணோமே
என்னுயுரோடே செஞ்சிக்கோட்டைக்கு நான் தான் போவேனோ
இனிமேலிருக்க நியாயமில்லை” என்று நினைத்தவனே

கத்தியைச் சுழற்றி உயரே எறிந்தான் ராஜாதேசிங்கு
மார்பைவிரித்து மண்மேல் படுத்தான் ராஜாதேசிங்கு
கிருஷ்ணு ! ராமா ! என்று சொல்லிக் கீழே விழுந்தானே
ராஜா விழுந்ததைக் கண்ணுல் கண்டான் நவாபுசைதுல்லா
தூக்கி எடுத்து மடியில் வைத்தான் நவாபுசைதுல்லா.

## 28. உபகாரம் வீண் போகாது

காவனூர் என்ற கிராமத்தில் கோபாலன் என்ற பையன் இருந்தான். அவன் பிராணிகளிடத்தில் இரக்கமும் அன்பும் உள்ளவன். ஒருநாள் அவன் அயலூருக்குப் போக நேர்ந்தது. ஆகையால் கோபாலன் கட்டுச்சோறு எடுத்துக்கொண்டு புறப்பட்டான்.

வழியில் அவன் ஒரு காட்டை கடக்கவேண்டியிருந்தது. அவன் காட்டின் வழியாகச் செல்லும்போது, சேறு நிறைந்த ஒரு குட்டையில் குருடன் ஒருவன் விழுந்து தத்தளிப்பதைக் கண்டான். அக் குருடன், கோபாலன் போவதைச் சத்தத்தால் அறிந்து,

(முத்திநெறி அறியாத என்ற சந்தம்)

கண்ணிலாக் குருடன் ஐயா !
கதியில்லாமல் விழுந்துவிட்டேன்
புண்ணியவானே நீருமெனை
பொறுமையுடனே எடுத்துவிடும்.

"ஐயா நான் குருடன். வழி தெரியாமல் இச் சேறு நிறைந்த குட்டையில் விழுந்துவிட்டேன். தயவு செய்து என்னை இதிலிருந்து கரையேற்றி, பாதையில் விட்டுவிடும்" என்று வேண்டினுன். அதைக் கேட்ட கோபாலன்,

கண்ணியமுள்ள பெரியவரே !
கருத்துடனே உம்மை விடுவிப்பேன்
எண்ணியபடியே இல்லாமல்
ஐயா யானெரு சிறுபயலே.

"பெரியவரே! இதோ உம்மைக் கரையேற்றி விடுகிறேன். ஆனால் நீர் எண்ணியபடி நான் பெரிய மனிதனல்ல. சிறு பையன். அடுத்த கிராமத்திற்குச் சென்று, இருட்டுமுன் திரும்பவேண்டும்" என்று கூறிக் குருடனைக் கரையேற்றி, நல்ல பாதையில் விட்டுச் சென்றான்.

செல்லும்போதே பாதையின் அருகே மயக்கமாய் விழுந்து கிடக்கும் நொண்டி ஒருவனைக் கண்டான். அந் நொண்டி, பையனைக் கண்டதும்,

எட்டு நாளாய் உணவில்லாமல்
ஏக்கமுடனே மயங்குகிறேன்
கட்டுச் சோற்றில் சிறிதளித்துக்
காத்திடுவாயோ பையா நீ.

"பையா! எட்டு நாளாய் உணவில்லாமல் இவ்விடத்திலேயே கிடக்கின்றேன். தயவு செய்து உனது கட்டுச் சோற்றில் சிறிது கொடுத்து என்னைக் காப்பாற்று" என்று கெஞ்சினான்.

இதைக் கேட்ட கோபாலன்,

திட்டமுடன் இச்சோற்றினையே
தின்று பசியைத் தீர்த்துக்கொள்ளும்
கஷ்டத்துடனே ஊர் சென்று
கருத்துடன் திரும்புவேன் விரைவாக.

"ஐயா இக்கட்டுச் சோற்றை நீர் சாப்பிடும். நான் அயலூர் சென்று சீக்கிரம் இருட்டுமுன் திரும்பவேண்டும்" என்று கூறிக் கட்டுச்சோற்றைக் கொடுத்துச் சென்றான்.

ஆனால் கோபாலன் திரும்பி வரும்போது நடுக்காட்டில் பொழுது இருட்டிவிட்டது. வழியில் அவன் பாடிக்கொண்டே வந்தான். இரண்டு திருடர்கள் அவனை மடக்கிக் கொண்டார்கள். அப்பொழுது,

வாருங்கள் வாருங்கள் சீக்கிரமே
வந்திதோ இருக்கிற திருடர்களைப்
பாருங்கள் பிடியுங்கள் கட்டுங்கள்
பாவத்தொழில் செய்யும் கள்வர்களை.

"வாருங்கள்! வாருங்கள்! சீக்கிரம் அதோ இருக்கும் திருடர்களைப் பிடியுங்கள்; கட்டுங்கள்; அடியுங்கள்" என்ற சத்தம் கேட்டது. இதைக் கேட்ட திருடர்கள் ஓடிவிட்டனர். முன்பு கோபாலன் உபகாரம் செய்த நொண்டி, குருடன் மேல் ஏறிக்கொண்டு, இருவரும் சத்தமிட்டுக் கொண்டே வந்தார்கள். அவர்களைக் கண்டதும் கோபாலன்,

ஐயன்மீர் உங்கள் உதவியினால்
ஆபத்திலிருந்து தப்பிவிட்டேன்
மெய்யாகவே நீங்கள் வராவிடில்
மேன்மேலும் ஏதேது செய்வார்களோ?

"ஐயன்மீர்! நீங்கள் சமயத்தில் வந்தீர்கள். இல்லாவிட்டால் அத்திருடர்கள் என்னை அடித்துக் கஷ்டப்படுத்தியிருப்பார்கள். உங்களுக்கு மிகவும் வந்தனம்!" என்று கூறினான். அதற்குள் அவர்கள்

பையனே உன் ஆபத்தினைப்
பார்த்ததுமே நாங்கள் ஓடிவந்தோம்
செய்யும் உபகாரம் ஒருநாளும்
சேதமாகாது தெரிந்து கொள்வாய்.

"பையா! உன் குரலைக் கேட்டு, உன் ஆபத்தை அறிந்து சத்தமிட்டுக் கொண்டே ஓடிவந்தோம். அதனால் திருடர்கள் ஓடிவிட்டனர். நீ இன்று எங்களுக்கு உபகாரம் செய்ததினால் உன் குரலைத் தெரிந்து கொண்டோம். இல்லாவிடில் யாரோ என்று பேசாமல் இருந்திருப்போம். ஆகையால் ஒருவர்க்கு உபகாரம் செய்தால் அது என்றும் வீண் போகாது" என்று கூறிச் சென்றனர். கோபாலனும் சௌக்கியமாய் வீடு சேர்ந்தான்.

### பயிற்சியும் கேள்வியும்

I (1) பின் வரும் வார்த்தைகளைத் தகுந்த வாக்கியங்களில் அமை :—இரக்கம், அன்பு, தத்தளி, வழி தெரியாமல், கரையேற்றி, திருடர்கள், தப்பிவிட்டேன். (2) இப் பாடத்தில் உள்ள பெயர்ச் சொற்களில் நான்கும், வினைச் சொற்களில் நானகும் எடுத்து எழுது.

II (1) கோபாலன் யார் யாருக்கு உபகாரம் செய்தான்? அவர்களால் கோபாலனுக்கு எந்த விதத்தில் பிரதியுபகாரம் செய்ய முடிந்தது? (2) இப் பாடத்தினுல் நீ கற்றுக்கொண்ட நீதி என்ன?

## அப்பியாசம்—5

கீழே கொடுக்கப்பட்டுள்ள குறிப்புகளை உபயோகப்படுத்தி, ஒரு சிறு கதை எழுது.

### I. நாய் அறிவுள்ள பிராணி

காலொடிந்த நாய்—மனிதர்கள் வைத்தியசாலைக்குப் போவதைப் பார்த்தல்—வைத்தியசாலையில் நாய்—வைத்தியர் நாயின் காலுக்குக் கட்டுக்கட்டுதல்—சில நாளில் குணம்—இந்நாய் வேறொரு நொண்டி நாயைக் காணல்—அதனை வைத்தியசாலைக்கு அழைத்துப்போதல்.

### II. காக்கையின் தந்திரம்

தாகமுள்ள காகம்—ஜலத்தைத் தேடி அலைதல்—ஒடுங்கிய வாயுடைய ஒரு ஜாடியின் அடியில் ஜலத்தைப் பார்த்தல்—ஜலம் மூக்குக்கு எட்டாததால் ஏமாற்றம்—அருகே இருந்த ஒரு கல்லை ஜாடிக்குள் போடுதல்—பல கற்களைப் போடுதல்—ஜலம் உயர வருதல்—ஜலத்தைக் குடித்து மகிழ்தல்.

## 29. கடிதம் எழுதும் முறை

கடிதம் எழுதும் முறையில் முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய விஷயம், சரியானபடி விலாசம், ஊர், தபாலாபீஸ், ஜில்லா முதலியவைகள் சரியாகவும் தப்பிதமில்லாமலும் எழுதப்பட வேண்டும். சிறு தவறுதலால் பல கஷ்டங்களும் பெரிய நஷ்டங்களும் ஏற்படும். எழுதிய கடிதத்தை திருப்பி ஒரு தரம் படித்துப் பார்த்தபின், உறையில்

போடவேண்டும். உறையின் மேல் எழுதப்பட்ட விலாசம் உள்ளவருக்குத் தானு கடிதம் எழுதப்பட்டதென்று சரி பார்த்த பின் தான் எழுதப்பட்ட கடிதத்தை உறையில் வைக்கவேண்டும். கடிதத்துடன் ரூபாய் நோட்டு கள் வைத்து அனுப்புவது குற்றமாகும்.

(1. பெரியோருக்கு)

22. மேலமாசி வீதி, மதுரை.
10-உ ஏப்ரல்மீ 1939-ஸு

க்ஷேமம்

அன்புள்ள மாமா அவர்களுக்குத் தங்கள் மருமகன் சுப்பிர மணியன் அநேக நமஸ்காரம். இங்கு எல்லோரும் சுகமாய் இருக் கிறோம். அவ்விடத்தில் எல்லோருடைய க்ஷேமத்தையும் தெரிவிக்க வேண்டுகிறேன்.

நான் தினந்தோறும் தவருமல் பள்ளிக்கூடம் போகிறேன். பாடம் நன்ருய் படிக்கிறேன். எங்கள் உபாத்தியாயர் அன்போடு பாடம் கற்பிக்கிருர். இந்த வருஷம் பரீக்ஷையில் நன்ருய் எழுதியிருக்கிறேன். பரீக்ஷையில் நான் தேறிவிடுவேன்.

இவ்வூரில் இம்மாதக் கடைசியில் நடக்கும் சித்திரை திருவிழா விற்குத் தாங்கள் அவசியம் வரவேண்டும். வரும்போது மாமி, குழந் தைகள் முதலியவர்களையும் கட்டாயம் கூட்டிக்கொண்டு வர வேண்டு கிறேன்.

எல்லோருக்கும் என் நமஸ்காரத்தைச் சொல்லவும்.

தங்கள் அன்புள்ள,

**விலாசம் :—** **சுப்பிரமணியன்.**

மகா-ள-ள-ஸ்ரீ

**காளஹஸ்தி முதலியார்,**
முனிஸிபல் கௌன்சிலர்,
பொள்ளாச்சி.

### (2. சிறியோருக்கு)

பொள்ளாச்சி.

15-௳ ஏப்ரல்-௴ 1939-௵

க்ஷேமம்

சிரஞ்சீவி சுப்ரமணியனுக்கு அநேக ஆசிர்வாதம். இவ்விடம் யாவரும் க்ஷேமம். அவ்விடத்திய க்ஷேமத்தை அறிய மிகவும் சந்தோஷம்.

உன்னுடைய கடிதம் கிடைத்தது. நீ தவருமல் பள்ளிக்கூடம் போய் நன்ருய்ப் படிப்பதை அறிந்து மிகவும் சந்தோஷப்படுகிறேன். உன்னுடைய பாட்டியார் உன்னைப் பார்க்க ஆசைப்படுகிருர்கள். நாங்கள் எல்லோரும் திருவிழாவிற்கு அவசியம் வருகிருேம். வரும்போது உனக்கு ஒரு புதிய சட்டை தைத்துக்கொண்டு வருகிறேன்.

உன் தாயார் தகப்பனுர்களிடம் நாங்கள் வரும் விஷயத்தைச் சொல்லவும். மற்றவை நேரில்.

உன் அன்புள்ள,

விலாசம் :— காளஹஸ்தி முதலியார்.

சிரஞ்சீவி

சுப்பிரமணியன்,

22, மேல மாசி வீதி,

மதுரை.

# அப்பியாசம்—6

## காக்கையின் தந்திரம்


படப்பழக்கம்—I




1 2 3 4

## நாயின் நல்லறிவு

படப்பழக்கம்—II



1 2 3 4 5


மடிக்க

## 30. தலையணை உறை தைத்தல்

தலையணை எவ்வளவு நீளம் அகலம் வேண்டுமோ, அந்த அளவுக்குத் தகுந்தாற்போல் ஒரு துணியை எடுக்கவேண்டும். துணியின் அகலத்தைத் தலையணையின் அகலத்திற்கு ஆறு அங்குலம் அதிகமாகவும், தலையணையின் நீளத்திற்கு இரண்டு மடங்குக்கு ஆறு அங்குலம் அதிகமாகவும் துணியை வெட்டி எடுத்துக்கொள்ள வேண்டும். துணியை நீளமாக வைத்து, இரண்டு அகல வச ஓரங்களையும் மடித்துத் தைத்துக் கொள்ள வேண்டும். பின்பு நீள வசத்தை இரண்டாக மடித்து, ஓரங்கள் படியும்படி தைக்கவேண்டும். இப்பொழுது ஒரு பை தைத்தாய் விட்டது. இந்தப் பையின் உள்பாகம் வெளியேயும், வெளிப்பாகம் உள்ளேயும் மாற்றி எடுத்துக் கொண்டால், தையல் வெளியே தெரியாது. அகல வசத்தில் ஓரத்தை மடக்கித் தைத்தும், உட்பக்கமாய்த் திரும்பி வரும்படி முதலிலேயே கவனித்துக் கொள்ள வேண்டும்.

இதன் பின் சிறு பாளமாக நீண்ட துணியை எடுத்து சுருக்குகள் விழும்படி தைத்து (டக்கு பிடித்து), அதை மூன்று ஓரங்களிலும், உறையின் வாயில் ஏதாவது ஒரு ஓரத்திலும் தைத்துக் கொண்டால் அழகாயிருக்கும்.

## 31. கொன்றை வேந்தன்

அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்.
ஆலயந் தொழுவது சாலவும் நன்று.
இல்லறம் அல்லது நல்லறம் அன்று.
ஈயார் தேட்டைத் தீயார் கொள்வர்.
ஊருடன் பகைக்கின் வேருடன் கெடும்.
எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்.
ஏவா மக்கள் மூவா மருந்து.
ஐயம் புகினும் செய்வனச் செய்.
ஒளவியம் பேசுதல் ஆக்கத்திற்கு அழிவு.
கிட்டா தாயின் வெட்டென மற.

கீழோர் ஆயினுந் தாழ உரை.
கெடுவது செய்யின் விடுவது கருமம்.
கேட்டில் உறுதி கூட்டும் உடைமை.
கைப்பொருள் தன்னின் மெய்ப்பொருள் கல்வி.
சான்றோர் என்கை ஈன்றோர்க்கு அழகு.
சூதும் வாதும் வேதனை செய்யும்.
தந்தை சொல் மிக்க மந்திரம் இல்லை.
தாய் சொல் துறந்தால் வாசகம் இல்லை.
திரைகடலோடியுந் திரவியந் தேடு.
தெய்வஞ் சீறின் கைதவ மாளும்.
தேடாது அழிக்கின் பாடாய் முடியும்.
நுண்ணிய கருமம் எண்ணித் துணி.
நூல்முறை தெரிந்து சீலத் தொழுகு.
மாரி அல்லது காரியம் இல்லை.
மீகாமன் இல்லா மரக்கலம் ஓடாது.
முற்பகல் செய்யின் பிற்பகல் விளையும்.
மூத்தோர் சொல் வார்த்தை அமிர்தம்.
வீரன் கேண்மை கூர் அம்பாகும்.
குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை.
கோள் செவிக் குறளை காற்றுடன் நெருப்பு.
சோம்பர் என்பவர் தேம்பித் திரிவர்.
தீராக் கோபம் போராய் முடியும்.
தோழனோடும் ஏழமை பேசேல்.
நல்லிணக்கம் அல்லது அல்லற் படுத்தும்
நீரகம் பொருந்திய ஊரகத் திரு.
நெஞ்சை ஒழித்தொரு வஞ்சக மில்லை.
நைபவரெனினும் நொய்ய உரையேல்.
பண்ணிய பயிரில் புண்ணியம் தெரியும்.
பாலோடாயினும் காலம் அறிந்துண்.
புலையும் கொலையும் களவும் தவிர்.

பொல்லாங் கென்பவை யெல்லாந் தவிர்.
மருந்தே ஆயினும் விருந்தோடுண்.
ஊக்கம் உடைமை ஆக்கத்திற் கழகு.
வேந்தன் சீறின் ஆந்துணை இல்லை.
வையந் தோறும் தெய்வம் தொழு. 45

800 009

## 32. கூடாப்பத்து

1. போதுமான நேரமிருப்பதாகத் தோன்றின போதிலும், ஒரு வண்டியின் முன், அதற்குச் சமீபமாய் ரஸ்தாவைத் தாண்டி ஓடக் கூடாது.

2. ரஸ்தாவைத் தாண்டி ஓடுவதற்கு முன் இருபுறமும் பார்க்காமல் ஓடக்கூடாது.

3. இரண்டு வண்டிகளுக்கு நடுவே, நடந்தோ சைக்கிளிலோ போகக்கூடாது.

4. ஒருவர் உட்காரும்பொழுது அவர் உட்காரும் நாற்காலியைப் பின்னால் இழுக்கக்கூடாது.

5. சிம்ணி விளக்கை அணைக்க மேலிருந்து ஊதக்கூடாது.

6. சுவருக்கு அப்புறமிருந்தேனும் உயர இருந்தேனும் கல் எறியக்கூடாது.

7. ஓடும் ரயில் வண்டியிலிருந்து எத்தகைய பதார்த்தங்களையும் வெளியே எறியக் கூடாது.

8. வேகமாய்ச் செல்லும் ரயில் வண்டியின் ஜன்னல்களில் தலையை நீட்டி எட்டிப் பார்க்கக்கூடாது.

9. ஒருபோதும் குண்டூசியால் பல்லைக் குத்தக்கூடாது.

10. ஒரு குழந்தையை எப்பொழுதும் அதிலும் இருட்டில் பயமுறுத்தக் கூடாது.

---

**குறிப்பு:**—இதை நன்றாய்ப் பையன்களுக்கு விளக்கி அவர்கள் இதன்படி ஒழுகுமாறு செய்யவேண்டிய கடமை உபாத்தியாயரைச் சேர்ந்தது.

## அப்பியாசம்—7. படப்பழக்கம்—III



பதிப்புரிமை:

பதிப்பாளர்
வி. சூ. சுவாமிநாதன்
மதுரை :: திருநெல்வேலி

---

SWADESA VASAGAM BOOK III : : PRICE 0—7—0